Registered as a News paper in Ceylon விலை சதம் 15



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 10 [11-1-69] இதழ் 334
யாழ்ப்பாணம் கீலக மார்கழி 28 ஷவ். 21 சனிக்கிழமை

சர்க்கரை வேண்டுமா?
சிறிதும் கலப்பின்றி
சுத்தமான
சர்க்கரை
தொகையாக
எமது கையிருப்பிலுண்டு
பொங்கல் திருநாளை
பொலிவுடன் கொண்டாட
எம்மை நாடுங்கள்!

ஆ. வயித்திலிங்கம் அன் கோ
45, கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம்
போன்: 663

## வல்வெட்டித்துறையில்

# இராணுவ நடவடிக்கைக்கு கட்டுப்பாடு

## விசேஷ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்

வல்வெட்டித்துறை, வெள்ளி

**வல்வெட்டித்துறையில் இராணுவ நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இங்கு நடைபெற்ற இராணுவத் தாக்குதல்கள் சம்பந்தமாக விசாரணை நடத்த கொழும்பிலிருந்து விசேஷமாக வந்த இரண்டு இராணுவ அதிகாரிகள் இக்கட்டுப்பாடு உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.**

வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு முன்னால் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இராணுவத் தாக்குதல்கள் சம்பந்தமான விசாரணைகள் இன்று பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் இல்லத்தில் நடைபெற்றது. இதில் இரண்டு விசேஷ அதிகாரிகளும், பலாலி இராணுவ முகாம் தளபதியும், மற்றும் சில அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து வந்த விசேஷ அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்தையும் பார்வையிட்டனர்.

இராணுவத் தாக்குதல்களுக்குள்ளாகி, காயமடைந்த இரண்டு சகோதரர்களும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும், மந்திகை ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இராணுவத்தினர் அத்துமீறி நடந்துகொண்டால் உடன் பொலிசாருக்கு அறிவிக்கும்படியும் பொதுமக்கள் கேட்கப்படுள்ளார்கள்.

தாக்குதலை நடத்தியதாகக் கருதப்படும் இராணுவ வீரர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இவர்கள்மீது எவ்வித நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி இராணுவ உயர் அதிகாரிகள் விரைவில் முடிவு செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் பற்றி பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், உப-சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் அரசாங்கத்திடம் வன்மையாக முறையிட்டிருந்தனர்.

## இராணுவ வீரர்கள் உடனடி இடமாற்றம்

தாக்குதல் சம்பந்தப்பட்ட விசாரணைகளை நடத்துவதற்காக நேற்றிரவு கொழும்பிலிருந்து வந்த இராணுவக் காப்டன் பக்சிவீரா, காப்டன் பண்டார ஆகியோர் இன்றிரவே பயணமானார்கள். இன்று பலாலி வந்தடைந்த சட்டவிரோதக் குடியேற்றப் பிரிவு அதிகாரி கேர்ணல் ஜெயவீராவை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் சந்தித்து, இச்சம்பவம்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை இராணுவத் தாக்குதல்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் சில இராணுவ வீரர்கள் உடனடியாகப் பலாலி முகாமுக்கு மாற்றப்பட்டார்கள்.

விசாரணை நடாத்திய இராணுவ உயர் அதிகாரிகள், வல்வெட்டித்துறையில் அமைதி நிலைநிறுத்தப்படுமென்றும், இதில் பொலிசாருடன் தாம் ஒத்துழைக்க முன்நிற்பதாகவும் பருத்தித்துறை எம். பி.க்கு உறுதியளித்தனர்.

### பாரத வர்த்தக அமைச்சர் வருகிறார்

கொழும்பு, வெள்ளி

பாரத வர்த்தக அமைச்சர் திரு. தினேஷ்சிங் இம்மாதம் 25ந் திகதி கொழும்பு வருகிறார். இவர் கொழும்பில் நடைபெறவிருக்கும் பாரத கைத்தொழிற் கண்காட்சியைத் திறந்துவைக்கவே வருகிறார். இங்கு வரும் தினேஷ்சிங், பொருளாதார அபிவிருத்தித்துறையில் இலங்கை-இந்திய ஒத்துழைப்பு சம்பந்தமாகவும் அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

ரஷ்யாவின்

## 'வீனஸ்-5', 6 கலங்கள் சுக்கிரனில் தரை இறங்கும்

மாஸ்கோ, ஜன. 10

சுக்கிர கிரகத்தில் இறங்குவதற்கான செயற்கைக்கிரகமொன்றை மீண்டும் சோவியத் ரஷ்யா இன்று அனுப்பியுள்ளது. கடந்த 5ந் திகதி சோவியத் ரஷ்யா சுக்கிரனுக்கு அனுப்பிவைத்த வீனஸ்-5 என்ற செயற்கை விண்வெளிக் கலத்திற்கு அடுத்ததாக, 5 நாட்களுக்குள் வீனஸ்-6 என்ற ஆளில்லாத விண்வெளிக்கலத்தை ரஷ்யா சுக்கிரனுக்கு அனுப்பிவைத்துள்ளது.

ஏற்கனவே விண்வெளியில் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கும் வீனஸ்-5 என்ற கலமும், இன்று அனுப்பிவைக்கப்பட்ட வீனஸ்-6 என்ற கலமும் ஒன்றாகச் சேர்ந்து சுக்கிரன் பற்றிய ஆராய்வு நடத்துமென்றும், பின்னர் சுக்கிரனின் வலது பக்கத்தில் தரையிறங்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

# "மேல்நாட்டு கல்விமுறையே வேலையின்மைக்கு காரணம்

## காந்திஜியின் நூல்களை மாணவர் படிக்கவேண்டும்"

### இந்துக்கல்லூரியில் திரு. ஜெயப்பிரகாஷ்

யாழ்ப்பாணம், சனி

"காந்தி நூற்றாண்டுவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மாணவர்கள் காந்திஜி எழுதிய நூல்களையும், காந்திஜி பற்றி மற்றவர்கள் எழுதிய நூல்களையும் நிறையப்படிக்கவேண்டும். ஓய்வு நேரங்களில் நூல் நிலையங்களுக்குச் சென்று, காந்திஜி பற்றிய நூல்களை நீங்கள் படிக்கவேண்டும். உங்கள் கல்லூரிகளிலுள்ள நூல் நிலையங்களிலும் காந்திஜி பற்றிய நூல்களைப் படிக்க வேண்டும். இதுதான் நான்கூறும் புத்திமதி"

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுக் காலை நடந்த கூட்டத்தில் அகில இந்திய சர்வோதய இயக்க தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மேற்கண்டவாறு கூறினார்.

மாணவ மாணவிகள், கூட்டுறவாளர்கள், கிராமமுன்னேற்ற சங்க பிரதிநிதிகள், மாதர்சங்க உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினார்கள்.

கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மேலும் கூறியதாவது:

இலங்கையில் இப்படிப்பட்ட கூட்டத்தில் பேசுவது இதுதான் முதல்தடவையாகும். அதையிட்டுநான் மகிழ்ச்சியடைகிறேன். காந்திஜியின் நூற்றாண்டுவிழா இங்கு கொண்டாடப்படுகிறது. இந்த வேளையில் மாணவர்கள் காந்திஜியைப் பற்றி அதிகம் அறியமுயலவேண்டும். காந்திஜியின் சுயசரிதையை படியுங்கள். அதனால் நீங்கள் பயனடைவீர்கள். அவர் எழுதிய நூல்களை படியுங்கள். அவர் எழுதிய ஏராளமான நூல்கள் உண்டு. நூல்நிலையங்களில் அவர் பற்றிய நூல்கள் பல இருக்கும் என நம்புகிறேன். அவற்றை நீங்கள் படிக்க வேண்டும். உலகத்தில்உள்ள கண்டங்களைச் சேர்ந்த 70 நாடுகளில் காந்திஜி விழா கொண்டாடப்படுகிறது. இதுவே பெரியகாரியம் என்று கூறலாம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இ. போ. ச. தயாரிக்கும் புதிய 'பானம்'?

உடுப்பிட்டி, வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச்சபை புதுவகைப் பானம் ஒன்றையும் உற்பத்தி செய்கின்றதா எனக் கேட்கின்றனர் பிரயாணிகள். பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் இ. போ. ச. பஸ்களின் புதிய பெயர்ப் பலகைகளே இச்சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

அப்பெயர்ப் பலகைகளில் "யாழ்ப்பானம்" எனப் பொறிக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம். யாழ்ப்பாணம் என்றிருக்க வேண்டியது யாழ்ப்பானமாக உருமாறியுள்ளது.

இத்தமிழ்க் கொலைக்கு வருத்தமும், கண்டனமும் தெரிவித்து உடுப்பிட்டித் தமிழ்மன்றம் தீர்மானம் இயற்றியுள்ளது. இதுசம்பந்தமாக உடுப்பிட்டித் தமிழ் மன்ற இணைச் செயலாளர் திரு. எஸ். ஆறுமுகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் "தமிழ் மொழி அநாதி தொட்டுப் புகழுடனும் சிறப்புடனும் விளங்கி வருகின்றது. ஆனால் இன்று எமது அக்கறையீனத்தால் தமிழ்மொழி, எழுத்து, ஒலி வடிவில் வரவரக் குறைந்து கொண்டே வருகின்றது.

இ. போ. ச. பெயர்ப் பலகைகளில் ஏற்படும் பிழைகளைக் சிறு தவறுகள் என விட்டுவிடக்கூடாது. தமிழ்ப் பகுதியில் ஒரு முக்கிய தமிழ் நகரின் பெயர் இப்படிக் கொலை செய்யப்பட்டுள்ளதை எவரும் மன்னிக்க மாட்டார்கள். வெளியூர்த் தமிழர்கள் பார்வையில் இப்படியான தவறுகள் சிக்குவதால் அவர்கள் எம்மை எள்ளி நகையாட வழி வகுத்துவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது பெற்ரேல் விநியோக நிலையங்களுக்கு விற்பனையாளர்கள் (Pumpers) தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேர்முகமாக விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 504

ஒற்றைக் குளாய் துவக்கு (12 Bore) நல்ல நிலையில் தேவைப்படுகிறது. விற்க வைத்திருப்போர் அதன் விலை விபரத்தை தபால் மூலம் தெரிவிக்கவும். விளம்பர இல. 476. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 476.

### கல்வி

கிராமபோன் தட்டுகளின் உதவியுடன் ஆங்கில, சிங்கள பாடங்கள் குறுகிய காலத்தில் சிரமமின்றிப் பேச, எழுதக் கற்பிக்கப்படும். திருமகள் புத்தகசாலை, நெல்லியடி. 467

### கல்வி

விசேட ஆங்கில, விஞ்ஞான, வர்த்தக கலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இடம்: கொலீஜ் ஒவ் எடியூக்கேசன், பழைய பஸ் நிலையத்திற்கு முன்னுல், யாழ்ப்பாணம், தொலைபேசி: 526. 471

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**என் தம்பி**

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - வைஜயந்தி
நடித்த
**தேன் நிலவு**

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6 30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**ஆலய மணி**

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
**தங்கத் தம்பி**

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார், அசோகன், நாகேஷ்
நடித்த
**ரகசியப்பொலிஸ் 115**
(ஈஸ்ட்மென்ட் கலர்)

உலகில் பிரசித்திபெற்ற இடங்களில் படமாக்கி ஓடி வெற்றியீட்டி கொழும்பில் 23 வாரங்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருக்கும் அனேகரின் பாராட்டைப் பெற்ற மகத்தான **ஹிந்தி வர்ணச்சித்திரம்**
யாழ். மக்களின் அன்பு பொங்க
பொங்கல் விருந்தாக
**வெலிங்டன்** யாழ் நகர்
தினசரி 1-30, 6-00 9-30 மணி



ராஜ்கபூர், வைஜயந்திமாலா
ராஜேந்திரகுமார்
நடித்த
ராஜ்கபூரின்
**சங்கம்**
(ரெக்னிக் கலர்)
இசை: சங்கர் ஜெய் கிஷன்

5—வது வாரம்
இங்ஸ்லி (கொழும்பு)
சிவாஜி — தேவிகா
நடித்த
**நீலவானம்**

## தேவை

ஏ. எப். றேமொண்ட்ஸ் ஸ்தாபனத்தாருக்கு யாழ்ப்பாணத்தின் மத்தியில் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் பூந்தோட்டத்துக்கு ஏற்ற முற்றம் அமைந்த விஸ்தீரணமான கட்டடம் தேவை. கட்டட அமைப்புப் படத்துடன் விபரங்களை தருமாறு கேட்கின்ருேம்.

**ஏ. எப். றேமொண்ட்ஸ்**
மாகாண மரணவைபவ
சேவை லிமிட்டெட்,
532, புல்லர்ஸ் வீதி,
கொழும்பு-8.
1145

## தேவை

### பண்டகசாலை மனேச்சர்

ஊரியான் ப. நோ. கூ. சங்கப் பண்டகசாலைக்கு ஒரு மனேச்சர் தேவை.

வயது: 22 — 35.

கல்வித் தராதரம் ஜி. சி. ஈ. சாதாரணம். கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

பிணை: ரொக்கப் பிணை ரூபா 1000/-. ஆதனப் பிணை ரூபா 2000,-

சம்பளம்: ரூபா 100/-. சுத்த லாபத்தில் ஐந்து வீதம் கொமிசனுக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 15-1-69க்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் தலைவர், ஊரியான் ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

காகித உறை இடது பக்க மேல் மூலையில் பண்டகசாலை மனேச்சருக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடவேண்டும்.

இங்ஙனம்
ஒப்பம்:
**க. கனகசபாபதி,**
கௌரவ காரியதரிசி,
ஊரியான் ப. நோ. கூ. ச.
1142


## படிப்பக உறுப்பினர்

அளவெட்டி, வெள்ளி

மயிலிட்டி கண்ணகி படிப்பகத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. ஆ. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றபோது நடப்புவருட உத்தியோகத்தர் களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வ. சிவம், உபதலைவர்; திரு, எஸ். முருகையா, காரியதரிசி: திரு. மு. ஸ்ரீரங்கநாதன், உப காரியதரிசி: திரு. ஏ. வி. அருணகிரிநாதன், தனுதிகாரி: திரு. ஆ. லோகேஸ்வரன், உபதனுதிகாரி: திரு. எம். யோகநாதன், விளையாட்டுச் செயலாளர்: திரு. என். வடிவேஸ்வரன்.

15 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.


MANOHARA
JAFFNA
Daily at
4-45 7&9-45 p. m.
Frank Sinatra - Virnalisi
in
ASSAULTOMAQUEEM
(Technicolor-Panavision)


# தாயிடமிருந்து பிரிந்து சென்ருர் மகள்

அளவெட்டி, வெள்ளி

சுன்னுகத்தைச் சேர்ந்த இந்திராதேவி என்னும் இளம் பெண் இம்மாதம் 3-ந் திகதி ஊரை விட்டு ஓடியதாக சுன்னுகம் பொலிசில் புகார் செய்யப்பட்டதை அடுத்து பொலிசார் சாவகச்சேரியை அடுத்த மறவன்புலவில் இவரை கண்டுபிடித்து ரட்சண்ய சேனையில் சேர்ந்து நேற்று மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

பிரஸ்தாப பெண்ணுடன் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்ட இளம் பெண்ணின் காதலனுகக் கருதப்படும் டி. மகாலிங்கமும் நீதிமன்றத்தில் ஆஜரானுர்.

பிரஸ்தாப இளம் காதல் ஜோடி பதிவுத் திருமணம் செய்துவிட்டதாகக் கூறி அத்தாட்சிப்பத்திரத்தை இவர்கள் சார்பில் ஆஜரான திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து நீதிபதி இவர்களை விடுதலை செய்தார்.

விடுதலை பெற்ற ஜோடிகள் காரில் செல்ல ஆயத்தமானபோது மகளை தாய் அணைத்தாள். அதை மறுத்த மகள் காதலனுடன் காரில் சென்ருர்.

# நாவலர் சிலை நிதிக்கு நன்கொடைகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

செந்தமிழையும் சைவத்தையும் வாழவைத்து, மாபெரும் தேசத்தொண்டராக விளங்கிகி நல்லைநகர் நாவலருக்குச் சிலையும் மணிமண்டபமும் அமைப்பதற்கான நிதிக்கு மேலும்சில நன்கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் புங்குடுதீவு திரு. நா. க. மயில்வாகனம் 1001 ரூபா நன்கொடையாக அளித்துள்ளார். இந்துமாமன்றமும், விவேகானந்த சபையும் தங்கள் நன்கொடைகளை வழங்கி சிலைநிறுவும் முயற்சிக்கு ஒத்துழைப்பைத் தெரிவித்துள்ளன.

ஹெந்தலை ஆஸ்பத்திரியிலுள்ள தொழுநோயாளர்கள் நாவலர் பெருமானுக்குச் சிலை நிறுவப்படுவதையறிந்து மகிழ்ச்சியடைந்து தமக்குள் ஒரு சிறு தொகையைத் திரட்டி சிலைநிதிக்குக் காணிக்கையாக அனுப்பியுள்ளனர்.

தமிழ்ப்பகுதியிலுள்ள பல உள்ளூராட்சி மன்றங்களும் இந்நிதிக்கு நன்கொடை வழங்கவேண்டுமென உற்சாகம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சென்ற 1-11:68-ல் சிலை வார்ப்புவேலை தொடங்கப்பட்டபிறகு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் சிலைநிதிக்குக் கிடைத்துள்ள நன்கொடை விபரம் பின்வருமாறு:-

| | ரூபா. | சதம் |
|---|---|---|
| திரு. நா, க. மயில்வாகனம், கொழும்பு | 1001 | 00 |
| அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு | 108 | 00 |
| விவேகானந்தசபை, கொழும்பு | 108 | 00 |
| திரு. வெ. இராமலிங்கம்; காரைநகர் | 101 | 00 |
| திரு. ஏ. திருநாவுக்கரசு, காரைநகர் | 101 | 00 |
| திரு. ஏ. தில்லையம்பலம், சங்கரத்தை, வட்டுக்கோட்டை | 100 | 00 |
| திரு. சு. சிவசுப்பிரமணியம், கொழும்பு | 50 | 00 |
| சைவப்பிணியாளர் சங்கம், தொழுநோய் ஆஸ்பத்திரி, ஹெந்தலை | 15 | 50 |
| திரு. க. முத்துத்தம்பி | 10 | 00 |

மேலும் காரைநகர்கிராம சபை சென்ற 20-11-68ல் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சிலை நிறுவுவதை வரவேற்று அதற்காக நடவடிக்கை எடுக்கும் நாவலர்சபைக்குப் பாராட்டுத் தெரிவித்ததுடன், நாவலர் சிலை நிதிக்கென கிராம சபையின் சார்பில் 250 ரூபாவை வழங்கவேண்டுமெனவும் தீர்மானித்துள்ளது. அத்தோடு தமிழ்ப் பகுதிகளிலுள்ள மற்றும் கிராம சபைகள், பட்டின சபைகள், நகரசபைகள், மாநகச்சபைகள் என்பன நாவலர்சபைக்கு ஊக்கமும் உதவியும் கொடுக்கும்படி கேட்டுத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

சிலைவார்ப்பு வேலை பிரபல சிற்பி மணிவண்ணனுல் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது. சிலை வைப்பதற்கான மணிமண்டபக்கட்டிட வேலை தொடங்கப்படவுள்ளது. சிலை மணிமண்டபம், என்பவற்றிற்கு அரை லட்சம் ருபாவுக்கு மேல் நிதி தேவை. பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் காணிக்கையைக் கொண்டே இத்திருப்பணியைச் செய்து முடிக்க வேண்டுமென நாவலர்சபை தீர்மானித்துள்ளது. எவ்வளவு சிறிய தொகையை அனுப்பினுலும் அது அன்புடன் ஏற்கப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுகள் அனுப்பி வைக்கப்படும். எனவும் இணைப்பொருளாளர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, 59, நொறிஸ்கனல் வீதி, கொழும்பு-10. என்ற விலாசத்துக்கு நன்கொடைகளை அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## நெடுந்தீவுக்கு சிங்கள ஆசிரியர்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு பாடசாலைகளுக்கு உடனடியாக சிங்கள ஆசிரியர்களை நியமிக்குமாறுகல்வி மந்திரியைகோருவதற்கான நடவடிக்கைகளில் இப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளதாக நமது நிருபர் தெரிவிக்கிருர்.

வரும்காலத்தில் சிங்கள பாடம் அத்தியாவசியமென்று இப்பகுதி மக்கள் கருதுவதாலேயே கல்வி அமைச்சுக்கு மகஜர்ஒன்றை அனுப்புவதில் ஈடுபட்டுள்ளனர்.

## மீன்தட்டுப்பாடு நீங்கியது

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவில் சில மாதங்களாக நிலவிவந்த மீன் தட்டுப்பாடு மயிலிட்டி மீனவர்கள் இங்குவந்ததால் நீங்கியுள்ளது. வருடாவருடம் இங்குவந்து நெடுந் தீவு வெல்லை என்னும் மீன் பிடிக்கும் இடத்தில் இவ்வருடம் நெடுந்தீவு மீனவர்களும் தங்கியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை ஆட்சிக்குவழி செய்தபின்தான் ரொடீஷியாவுக்கு சுதந்திரம்

## காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் ஆபிரிக்க ஆசிய நாடுகள் வற்புறுத்தல்

### வாக்குறுதிகளை வாபஸ் பெறவும் கோரிக்கை

லண்டன், ஜனவரி 10

**ரொடீஷியாவில் பெரும்பான்மை மக்களின் ஆட்சிக்கு உத்தரவாதம் இல்லாமல் அந்த நாட்டுக்கு சுதந்திரம் வழங்கக்கூடாது என்று காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் பல நாடுகள் வலியுறுத்தியுள்ளன.**

**பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரொடீஷிய சட்டவிரோத ஆட்சியாளர் ஐயன் ஸிமித்துக்கு கொடுத்த வாக்குறுதிகள் வாபஸ் பெறவேண்டும் என்றும் பல நாடுகள் வற்புறுத்தியுள்ளன.**

ரொடீஷியாவின் ஐயன் ஸிமித்துக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை வாபஸ்பெறுவதற்கில்லையென்றும் அதேசமயம், விளக்கமற்ற முறையில் சுதந்திரம் வழங்கும் நோக்கம் கிடையாதென்றும் ரொடீஷிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் திரு. தொம்சன் பிரதமர்களுக்கு விளக்கினர்.

பிரதமர்கள் மகாநாட்டில் இம்முறை ரொடீஷியப் பிரச்னை சென்ற முறையை விட அமைதியாகவே ஆலோசிக்கப்படுவதாக நிருபர்கள் கூறுகிறார்கள். காமன்வெல்த்தைவிட்டு விலகப்போவதாகவோ, ரொடீஷியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடையை வலுப்படுத்த வேண்டும் என்று தீர்க்கமாக வற்புறுத்தவோ எந்த நாடும் அதிகம் முயன்றதாகத் தெரியவில்லை.

ரொடீஷியப் பிரச்னை குறித்து நேற்றும் இன்றும் காமன் வெல்த் பிரதமர்கள் ஆலோசனை நடத்தினார்கள். இன்று பிரிட்டிஷ் பிரதமர் தமது கருத்தை விளக்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ரொடீஷியப் பிரச்னை குறித்து தான்சானிய நாட்டு அதிபர் திரு. நைரேரி மிகவும் கடுமையாகப் பேசினார். பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன், ரொடீஷிய சட்டவிரோத ஆட்சியாளர் திரு. ஐயன் ஸிமித்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது கொடுத்த வாக்குறுதிகளின் மூலம் பிரிட்டன் ஒரு விதத்தில் தவறுசெய்துவிட்டது என்றார் அவர். ரொடீஷியப் பிரச்னைத் தீர்வுக்கு அவர் ஒரு திட்டத்தையும் கூறினர்.

பிரிட்டன் கொடுத்த வாக்குறுதியை வாபஸ் பெறவேண்டும், சட்டவிரோத ஆட்சியாளர்களுடன் எந்த விதப் பேச்சும் வைத்துக் கொள்ளக்கூடாது. அந்த நாட்டுக்கு எதிராக பொருளாதாரத்தடையை மேலும் வலுப்படுத்தவேண்டும்.

இந்தக்கருத்தை கானா, கினியா ட்ரினிடாட், சைப்பிரஸ் போன்ற நாடுகளும் கனடாவும் மற்றும் பல நாடுகளும் ஆதரித்தன.

இந்தியப் பிரதமர் நேற்று நிகழ்த்திய சிற்றுரையின் போது ரொடீஷியாவின் இன வெறிக்கொள்கையில் எந்தவித சமரசமும் இருக்க முடியாது. நிரந்தர முடிவு காணவேண்டிய விஷயத்தில் குறுக்கு வழி ஏற்பாடுகள் செய்யவும் கூடாது என்று வற்புறுத்தினர்.

தான்சானிய அதிபரின் கருத்தை அவர் ஆதரித்தார். சுதந்திரம் வழங்கு முன் பெரும்பான்மை ஆட்சிக்கு வழிவகுத்தாகவேண்டும் என்று அவர் வற்புறுத்தினர்.

# எம். எஸ். சுப்புலட்சுமியின் தாயார் பெயரில் பரிசு

## வீணைவித்வான் களுக்குவழங்கப்படும்

சென்னை, ஜன. 10

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் தாயார் சண்முகவடிவு அம்பாள் பெயரில் பரிசுக்கட்டளையொன்று ஏற்படுத்தப்பட விருக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு சிறந்த வீணைவித்துவானுக்கு இந்தப் பரிசுக் கட்டளையொன்று பரிசு அளிக்கப்படும்.

திருமதி சுப்புலட்சுமிக்கு சங்கீத கலாநிதி பட்டமளிக்கப்பட்டதை யொட்டி சென்னை சங்கீத வித்வத் சபையில் நடந்த ஒரு விழாவில் இந்த நன்கொடை வழங்கப்பட்டது. அங்கு திருமதி சுப்புலட்சுமி பேசுகையில்: தர்மம், பக்தி, சங்கீதம் ஆகியவற்றைக் கடந்த காலத்தில் இந்தியப் பெண்மணிகள் பாதுகாத்து வந்துள்ளார்கள் என்று தெரிகிறது. அந்த சம்பிரதாயங்களை இன்றைய பெண்மணிகள் பேண வேண்டும் என்று ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி கூறினர்.

சங்கீத வித்துவ சபை ஆண்டு தோறும் வழங்கி வரும் ''சங்கீத கலாநிதி'' பட்டத்தைப் பெற்ற முதல் பெண் இசைக் கலைஞர் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி.

இந்த விழாவுக்கு எம். எஸ். சுப்புலட்சுமி பாராட்டுக் குழு ஏற்பாடு செய்திருந்தது. சங்கீத ரசிகர்கள் இக்குழுவுக்கு அளித்த நன்கொடைகளிலிருந்து இரண்டு பரிசுக் கட்டளைகள் நிறுவப்படுவதாக விழாவில் அறிவிக்கப்பட்டது.

சங்கீத வித்வத் சபையில் ஒரு பரிசு கட்டளை நிறுவுவதற்காக சபையின் டிரஸ்டிகளில் ஒருவரான ஸ்ரீ. வி. டி. சுவாமியிடம் திருமதி சுப்புலட்சுமி ரூ. 6,000 அளித்தார். அவருடைய தாயார் சண்முகவடிவு பெயரில் இந்தப் பரிசுக் கட்டளை நிறுவப்படும்'' ஒவ்வொரு ஆண்டு சிறந்த வீணை வித்துவானுக்கு பரிசு அளிப்பதற்கு இது பயன்படுத்தப்படும்.

ஸ்ரீமதி சுப்புலட்சுமியின் பெயரில் மற்றொரு பரிசுக் கட்டளை தியாகராஜா வித்வத் சாமஜத்தில் நிறுவப்படும். சத்குரு தியாகராஜருக்கு தினசரி படையல்களுக்காக அது பயன்படுத்தப்படும். பரிசுக் கட்டளைத் தொகை ரூ. 2.000 திரு. முசிரி சுப்பிரமணிய அய்யர்பெற்றுக் கொண்டார்.

விழாவுக்குத்தலைமை வகித்த சர்தாரிணி உஜ்ஜல்சிங், திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியை ஒரு கலாசாரத் தூதர் என்று வருணித்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

# 'நான்குவல்லரசுகூட்டுமுயற்சிக்கு காலம்வந்து விட்டது

## பிரஞ்சு அமைச்சர் மீண்டும் வலியுறுத்துகிறார்

பாரிஸ், ஜன. 10

மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு நான்கு வல்லரசுகள் கூட்டு முயற்சியில் இறங்கவேண்டிய காலம் வந்துவிட்டது என்று பிரஞ்சு வெளிநாட்டு அமைச்சர் கூறியிருக்கிறார்.

நான்குவல்லரசுகள் கூட்டு முயற்சியில் இறங்கவேண்டும் என்று முன்னர்பிரான்ஸ் தெரிவித்திருந்த யோசனையைக் கைவிட்டிருந்தது. இப்பொழுது மீண்டும் அக்கருத்தை பிரஞ்சு வெளிநாட்டு அமைச்சர் திரு. தாபறே வலியுறுத்தியிருக்கிறார்.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதில்லையென்று பிரான்ஸ் செய்துள்ளமுடிவு குறித்து கருத்துவெளியிடுகையிலேயே திரு. தாபறே நிருபர்களிடம் இவ்வாறு கூறினர். அரபு நாடுகளுடன் பிரான்ஸ் நல்லுறவை வளர்த்துக்கொள்ள விரும்புகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## வீரர்களுக்கு கௌரவ விருது

வாஷிங்டன், ஜனவரி, 10

சந்திரனைச் சுற்றிவிட்டுப் பூமிக்குத் திரும்பிய அமெரிக்க வான்வெளி வீரர்களான போர்மன், வோவல் அண்டர்ஸ் ஆகிய மூவருக்கும் ஜனாதிபதி ஜோன்சன் மிகச் சிறந்த சேவைக்கான கௌரவ விருதுகள் அளித்து கௌரவித்துள்ளார்.

## சந்திரனில் இறங்கவிருக்கும் முதல் மூவர்

வாஷிங்டன், ஜன.10

சந்திரனில் போய்இறங்குவதற்கான முதல் மூன்று அமெரிக்க சந்திர பிரயாணிகளின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆம்ஸ்ரோங், மைக்கல் கொலின் அல்பிரட் ஆகிய மூவருமே சந்திரனில் போய் இறங்கவிருக்கும் அமெரிக்க வீரர்கள். ஆம்ஸ்ரோங்கும் அல்பிரட்டும் சந்திரனில் இறங்கி ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். அதே சமயம் மைக்கல் கொலின் தமது சந்திர மண்டலக் கலத்தை சந்திரனைச் சுற்றி செலுத்திக்கொண்டு இருப்பார். சந்திரனில் இறங்கியவர்கள் திரும்பவும் வந்து கலத்தில் ஏறிய பின் மூவரும் பூமிக்குத் திரும்புவார்கள் என்று [illegible]

## திருகோணமலை பற்றிய குழு

கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பின்வரும் நோக்கங்களுக்காக ஓர் விசாரணைக் குழுவை நியமித்துள்ளார்:-

(1) திருகோணமலைப் பட்டணத்திலும் அதனைச் சுற்றியுமுள்ள வளங்களையும் வசதிகளையும் பயன்படுத்தல், அபிவிருத்தி செய்தல் பற்றியும், குறிப்பாக-

[அ] திருகோணமலைத் துறைமுகம்
[ஆ] கைத்தொழில்
[இ] வியாபாரமும் வர்த்தகமும்
[ஈ] உல்லாசப் பிரயாணம்

என்பவற்றின் அபிவிருத்தி பற்றியும் அவை தொடர்பான பிற விடயங்கள் பற்றியும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும்,

(2) பிரடெறிக் கோட்டையினுள் உள்ளவாறான சமய, வரலாற்று அல்லது தொல்பொருளியல் சார்புள்ள சிறப்பான அமைப்புக்களைப் பேணும் பொருட்டு பிரடெறிக் கோட்டையினுள் பொருத்தமான பிரதேசத்தினது எல்லையைக் குறிப்பிடுதலும் அத்துடன் அந்தப் பிரதேசத்தை 'புனித பிரதேசமாக' பிரகடனப் படுத்தல் விரும்பத்தக்கதோ எனவும் ஆராய்ந்து விதப்புரை கூறுவதற்கும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர் அவற்றை எழுத்துமூலம் 1969 பெப்ரவரி 15 ஆந் திகதிக்கு முன் எனக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றனர். தட்டெழுத்துச் செய்யப்பட்ட ஒன்பது பிரதிகள் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

எஸ்.எம்.எல். மரிக்கார்,
குழுவின் செயலாளர்,

பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
செனேற் கட்டிடம், கொழும்பு-1.
1969 ஜனவரி 5.

G P 1251


# லங்காலோஹ

இலங்கைத் தயாரிப்பு உலோகப் பொருள்கள்

சிறந்த ரகம், நம்பிக்கை, நீடியகால பாவனைக்கு

லங்காலோஹ மண்வெட்டிகள்

அளவு 8'x10''—சில்லறை விலை ரூ. 8-25 ஒன்று
அளவு 7'x10''—சில்லறை விலை ரூ. 7-50 ஒன்று

யாழ்ப்பாண மோஸ்தர் மண்வெட்டி

உயர்ந்த உறுதி வாய்ந்த உலோகம்

நிறை 4 இருத்தல்



சில்லறை

ஒன்றுக்கு

ரூ. 14-00

இலங்கை அரசாங்க உலோகப்பொருட் கூட்டுத்தாபனம்

242, ஹவலக் ரோட், கொழும்பு-5.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

மன்னுயிர்க்குப் பணி செய்வதன் மூலம் இறைவனைக்காண யான் முயலுகின்றேன். ஏனெனில் இறைவன் சுவர்க்கத்திலும் இல்லை, கீழுலகிலும் இல்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனிடத்தும் இறைவன் உள்ளான். இது எனக்குத் தெரியும்.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box- 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மார்கழி மாதம் 28-ந் திகதி
(11 - 1 - 69)


## காமராஜரின் வெற்றி

இந்திய ஆட்சிமன்ற (லோக்சபை) ஸ்தானத்துக்கான தமிழகத்தின் நாகர்கோவில் தொகுதி இடைத்தேர்தலில் கர்மவீரர் காமராஜர் ஒருலட்சத்து இருபத்தோராயிரம் அதிகப்படியான வாக்குகளால் பெரும் வெற்றியீட்டி தமது செல்வாக்கை மட்டுமல்லாது தமிழ்நாட்டில் காங்கிரசின் செல்வாக்கையும் உயர்த்தியிருக்கிறார்.

சென்றபொதுத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் தமிழ்நாடு சட்டசபைக்குப் போட்டியிட்ட திரு. காமராஜர் தி. மு. கழகத்தைச் சேர்ந்த தமிழ்நாடு மாணவர் இயக்கத் தலைவரால் பெருந்தொகையான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டபோது, அச்சமயம் அவர் இந்தியகாங்கிரஸின் அக்கிராசனராக இருந்ததுடன் நேருவுக்குப்பின் 'பிரதமர்களை உருவாக்குபவர்' என்ற பெயரையும் பெற்றிருந்தார். மந்திரிப்பதவிகளிலிருந்தவர்களை அப்பதவிகளிலிருந்து ராஜினாமாச் செய்ய வைத்ததுடன் தமது முதல் மந்திரிப்பதவியையும் ராஜினாமாச் செய்து 'காமராஜ் திட்டத்தின்' மூலம் உலகப் புகழும் பெற்றிருந்தார். அவரது தோல்வி இந்தியாவில் மட்டுமல்ல உலகநாடுகளிலும் அதிர்ச்சியேற்படுத்தியது. தமிழக முதலமைச்சராகவிருக்கும் திரு. அண்ணாதுரை கூட அந்தத் தேர்தல் முடிவை அறிந்து அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்திருந்தார்.

இந்தஅதிர்ச்சியின் விளைவாக நாகர்கோவில் இடைத்தேர்தல் இந்தியாவினதும் உலகத்தினதும் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தது. திரு. காமராஜர் வெற்றி பெற்றால் தமிழ்நாட்டில் இந்தி நுழைந்து விடுமென்றும் இந்தித் திணிப்பைத்தடுப்பதற்காகவாவது காமராஜரைத் தோற்கடிக்க வேண்டுமென்றும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்களான திராவிடமுன்னேற்றக்கழகத்தினர் பிரசாரம் செய்து வந்தனர். திரு. காமராஜர் வெற்றிபெற்றால் இந்தியமந்திரியாவார் என்றுகாங்கிரஸ்தரப்பில் பிரசாரம் நடைபெற்றது. காமராஜர் வெற்றியீட்டிவிட்டார். மத்திய மந்திரிசபையில் அவர் இடம் பெறுவாரா? அப்படியானால் அவருக்கு எந்த அமைச்சு கிடைக்கும்?

திரு. காமராஜரைத் தவிர ஆறு அபேட்சகர்கள் இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டனர். இதில் நால்வர் தங்கள் கட்டுப்பணத்தை இழந்துள்ளனர். காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்தலில் போட்டியிட்ட திரு. காமராஜருக்கும் சுதந்திரா, தி.மு.க. கூட்டணி ஆதரவுடன் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்ட டாக்டர் மத்தியாசுக்குமிடையில் தான் போட்டியிருந்தது. ஆனாலும் டாக்டர் மத்தியாசைவிட திரு. காமராஜர் ஒன்றேகால் லட்சத்துக்கு அதிகமான வாக்குகளால் வெற்றிபெற்றிருக்கிறார். கூட்டணிஆதரவில் டாக்டர் மத்தியாஸ் போட்டியிட்டபோதிலும் ராஜாஜியோ, திரு. அண்ணாதுரையோ தேர்தல்பிரசாரத்துக்காக நாகர்கோயில் செல்லவில்லை. அறிக்கைகளுடன் நின்றுவிட்டனர். தமிழகஅமைச்சர்கள் கருணாநிதி, கோவிந்தசாமி, நெடுஞ்செழியன் முதலானோர் சென்றிருந்தனர். காங்கிரஸிலும் பெருந்தலைவர்கள் எவரும் காமராஜரைஆதரித்துப் பிரசாரம் செய்யச் செல்லவில்லை. அங்கு குழப்பம், கலகம், கல்வீச்சு சம்பவங்கள் மட்டுமல்ல கொலையும்கூட நடைபெற்றிருக்கிறது. நாடார்கள் அதிகமாக வாழும் நாகர்கோவில் தொகுதியில் நாடார் சமூகத்தைச் சேர்ந்த திரு. காமராஜர் போட்டியிட்டது சாதி அடிப்படையில் தான் என்றும் அவரது வெற்றி ஆச்சரியமானதல்லவென்றும் சொல்லக்கூடும். கிறிஸ்தவர்கள் நியாயமான அளவில்வாழ்கின்ற தொகுதி இது. இங்கு கூட்டணிஆதரவில் கிறிஸ்தவரான டாக்டர் மத்தியாசை போட்டிக்கு நிறுத்தியது மத அடிப்படையில் தானா என்றும் கேட்க இடமுண்டு. நாடார்சமூகத்தைச் சேர்ந்த மற்றொருவரும் இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

எப்படியானாலும் திரு. காமராஜர் அமோக வெற்றியீட்டியிருக்கிறார். காங்கிரஸுக்குள்ளும் திரு. காமராஜர் இதன் மூலம் தமதுசெல்வாக்கை நிலைநாட்டி விட்டார். தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சிக்கு புதிய சவாலும் விடுத்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி வந்த பின்னர், சில பகுதிகளில் ரூபாய்க்குப் படி அரிசி வழங்கும் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது; இந்தித்திணிப்புத் தடுக்கப்பட்டிருக்கிறது; காங்கிரஸ் ஆட்சிசெய்யத் தவறிய தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது; காங்கிரஸ் மத்திய மந்திரிகளே தி.மு.க.ஆட்சியைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆயினும் தி. மு. க. ஆதரித்த டாக்டர் மத்தியாஸ்தோல்வியடையவும் திரு. காமராஜர் வெற்றிபெறவும் காரணமென்ன? தி.மு.க. ஆட்சியாளர்கள் சிந்திக்கவேண்டிய விஷயம். இருபது வருடமாக தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ்மீது மக்கள் கொண்ட வெறுப்பு ஒருவருடகால தி. மு. க. ஆட்சியினால் மாறிவிட்டதா?

திரு. காமராஜரின் வெற்றி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு ஒரு சோதனை. மத்திய அரசாங்கத்துக்கும் தமிழ்நாடு அரசாங்கத்துக்கும் இதுவரை இருந்துவந்த உறவு நீடிக்குமா என்ற கேள்வியையும் நாகர்கோவில் இடைத்தேர்தல்முடிவு கேட்பதாக இருக்கிறது. இதே சமயம் சென்ற தேர்தலில் சுதந்திராக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு இம்முறை சுயேச்சையாகப் போட்டியிட்ட சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் மத்தியாசின் தோல்வி சுதந்திரா-தி. மு. க. உறவில் மாறுதல் ஏற்படுத்துமா? என்ற கேள்வியையும் கிளப்பியிருக்கிறது. எது எப்படியிருந்தாலும் திரு. காமராஜர் ஆற்றலும் அனுபவமும் உள்ளவர் மட்டுமல்ல அவர் ஓர் உண்மைத் தியாகி என்பதையும் இந்த இடைத்தேர்தல் நிரூபித்துவிட்டது.

## ஆசிரியருக்கு கடிதங்கள்

### குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்

பட்டாசுகளினாலும் வெடிகளினாலும் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மரணங்கள் விபத்துக்கள் பற்றி பலரும் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். பொங்கல் விழா அண்மிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் பட்டாசுகளும் வெடிகளும் அவசியமில்லையென்பது மட்டுமில்லை ஆபத்து மிக்கவையும் கூட என்பதை தமிழர்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு நான் நினைவுறுத்தவிரும்புகிறேன். காசைக்கரியாக்குவது மட்டுமின்றி ஆபத்தையும் வரவழைப்பதாகும். வெடிகள் ஏற்படுத்தும் சப்தம் குறிப்பாக குழந்தைகளின் உடம்பை பாதிக்கின்றது. இவைகளால் மரணம் ஏற்படலாம். சிலவேளைகளில் முகம், கண்கள், மற்ற அவயங்களுக்கு ஆபத்து விளைவிப்பதோடு கையை முற்றாக எடுத்துவிடக் கூடிய நிலையும் ஏற்படலாம் தைப் பொங்கலைக் கொண்டாட வெடிகளும் பட்டாசுகளும் தேவையில்லை அது ஒரு சமயச்சடங்கு, அதனை அமைதியாகக் கொண்டாலாம் கிறிஸ்மஸ், வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி, திருமணங்கள் போன்றவை மட்டுமின்றி மரணச் சடங்குகள் கூட வெடிகள் கொளுத்தாமல் பூர்த்தியாவதில்லை என்று சனங்கம் நினைக்கிறார்கள். இந்தப்பிழையான கருத்தை நம்மக்கள் கைவிட்டு தமது பணத்தையும், குழந்தைகளின், முகங்களையும், கண்கள், மற்றஅங்கங்களையும் காப்பாற்ற முன்வரவேண்டும்.

டாக்டர் கே. கனகரட்ணம்

### வண்டில்களுக்கு தனியிடம்

யாழ்ப்பாணபட்டினத்தின் மிக முக்கியமான வீதியான காங்கேசன்துறை வீதியில் பெரியதபால் கந்தோருக்கும் கொட்டடி சந்திக்குமிடையில் உள்ள வீதியில் சி. எஸ். கே. ஆலை கட்டிடத்திற்கும் அருகாமையில் பஸ் தரிப்பு நிலையம், இருந்தும் எப்பொழுதும் வண்டில்மாடுகளும் வண்டிகளுமே நின்று கொண்டிருக்கின்றன. இதனால் பாதசாரிகளுக்கும், பஸ் பிரயாணிகளுக்கும் மிக இடையூறாக இருக்கின்றது.

மாட்டுவண்டில்களுக்கு, மாடுகளுக்கு என ஓர் இடம் நகரசபை ஒதுக்கி ஆவன செய்யக்கூடாதா போலீஸ் பகுதியும் இதில் சிரத்தைக் காட்டும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இவை கவனிக்கப்பட்டால் சுகாதாரம், பொதுமக்கள் சௌகரியம், சட்டம், ஆகியன பாதுகாக்கப்பட்டதாகும்.

இப்படிக்கு
நகரவாசி

### பத்தமேனி மக்கள் கஷ்டம்

அச்சுவேலி, வெள்ளி

சங்கானை வீதியிலிருந்து 12-ம் கல் தொலையில் உள்ள வீதியின் பக்கலாகவுள்ள ஒழுங்கைக்குப் பாலம் ஒன்று அமையாததினால் பத்தமேனிப் பகுதிமக்கள்பெரும் கஷ்டப்படுகிறார்கள்.

மழைகாலங்களில் சூசையப்பர் கோவிலுக்குச் செல்லுவோர் பெரும் கஷ்டப்படுகின்றார்கள். இதில் பகிரங்க சேவைப் பகுதியினரோ கிராமசபையோ எதுவித சிரத்தையும் எடுக்கவில்லையெனத் தெரிகிறது.

இப்பாலத்தைக் கூடிய விரைவில் அமைத்துத்தரும்படி சூசையப்பர் கோவில் கட்டளைக்குரு வண. வேந்தக்கோன் இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளைக்கேட்டுள்ளார்.

### றேடியோ கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை றோட்டிலுள்ள ஒருவரின் வீட்டில் காணாமல் போனதாகக் கூறப்படும் றேடியோவையாழ்ப்பாணம் பொலிஸ் குற்றப்பிரிவைச் சேர்ந்த திரு. இ. இரத்தினம் திரு. வால்டர் ஆகிய இருவரும் கைப்பற்றியுள்ளனர்.

இது சம்பந்தமாக செம்மணியைச் சேர்ந்த முத்தையா சின்னையா, சோ. கந்தசாமி ஆகிய இருவரையும் கைது செய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 18-ம் தேதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார். (ந. நி)

### வாழ்வில் வெறுப்பால் செய்த முடிவு

பூனகரி, வெள்ளி

கிளிநொச்சி கரடிப்போக்கில் வசிக்கும் போல்ராசா (வயது 27) என்பவர் நேற்று மாலை கிருமிநாசினியை அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் விசாரணை நடத்தினார் விசாரணையில் இவர் வாழ்க்கையில் வெறுப்படைந்தவராக சில நாட்களாக மதுவருந்திய நிலையில் திரிந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. முடிவில் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## அரசியல்அ... ஏற்கமறு...

### ஜெயப்...

யாழ்ப்பாணத்துக்கு
தயத் தலைவரு
தினம் யாழ்ப்
பட்ட வரவேற்பி
இங்கே தரப்படு

உலக சரித்திரத்தில் புரட்சி நடைபெற்ற ரஷ்யா, பிரான்ஸ், கியூபா, அல்ஜீரியா போன்ற நாடுகளில் புரட்சி வெற்றி பெறக் காரணமாக இருந்து, புரட்சியை ஏற்படுத்திய தலைவர்களே பொதுவில், அதிகாரத்திற்கு தலைமை வகித்தார்கள். இந்தியாவில் புரட்சி செய்து வெற்றி பெற்ற காந்திஜி அதிகாரத்தை விரும்பவில்லை.

இந்தியா சுதந்திரம் பெற்றபின் தந்தை என்று சொல்லப்படும் உயர்ந்த நிலையில் உள்ள காந்திஜி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளவோ, பிரதமராக பதவி ஏற்றுகவோ விரும்பவில்லை. அந்நேரம் ஆக்கவும், அழிக்கவும் சக்தி படைத்த அவர், பிரதமர்களை உருவாக்க கூடிய வல்லமை படைத்த அவர் நேரு சென்ற போது சொன்னதென்ன? ''நேரு நீதான் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளவேண்டும்'' என்று காந்திஜி கூறினார். அவர் அதிகாரந்தை விரும்பவில்லை. ஏன் விரும்பவில்லை என்று இந்திக்க வேண்டும். அவர் மகாத்மாவாக இருந்த காரணம் என்றும் சொல்லலாம். அரசியலில் மாபெரும் தலைவராக இருந்தவர், அதிகாரத்தை விரும்பாததற்கு காரணம் உண்டு.

1947-ம் ஆண்டு சுதந்திர விழா கொண்டாட்டத்தில் காந்திஜி கலந்து கொள்ளவில்லை. அப்போது அவர் கல்கத்தாவில் இருந்தார். இந்த மாதிரியான சுதந்திரத்தைம் மட்டும் போதாது என்று கருதினார். பொருளாதார, சமுதாய, தாமீக விடுதலை என்ற மூன்று விடுதலைகளையும் பெற வேண்டும் என விரும்பினார். அரசியல் அதிகாரம் பிணக்கு உள்ளதென்பதை அன்றே அறிந்து கொண்டார். சுதந்திரம் பெற்ற மற்ற நாடுகள் படைப்பலம் பெற்ற பகுதியாகி அதிகாரம் பெற்றவர்கள் சர்வாதிகாரமுறையில் நடந்து கொள்வதை, 1948-ம் ஆண்டிலேயே அவர் காணக் கூடியதாயிருந்தது. சாதாரண மக்களுக்கும், அதிகாரத்திலுள்ளவர்களுக்கும் பிணக்குகள் இருக்கக் கூடாதென்று அவர் விரும்பினார்.

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தவுடன் காந்திஜி தனது வேலை முடிந்து விட்டதாக கருதவில்லை. இனிமேல் தான் நிரம்ப வேலை இருப்பதாக கருதினார். தனது செயல் திட்டத்தை செயல் படுத்த முயற்சித்தார். முக்கோண புரட்சியான பொருளாதார, சமுதாய, தார்மீக விடுதலைகளில் கவனம் செலுத்தினார். மக்கள் மனதை தார்மீக இயக்கத்தினால் மாற்றம் செய்ய விரும்பினார். தமது திட்டத்தை செயல் படுத்தி முடிக்க, அதிகாரத்தை கைப்பற்ற விரும்பவில்லை. அதிகாரம் வேண்டும் என்றும் அவர் கேட்கவில்லை. அடிப்படையில் தார்மிக புரட்சியை வைத்து வேலை செய்ய வேண்டும் என்பது அவர் உள்ளத்தில் தெளிவாக இருந்தது.

மற்ற நாடுகளில் புரட்சியின் பயனாக இன்று என்ன நடந்துள்ளதென்பதை நாம் அறிவோம். செல்வத்தினால் செழிப்பதை நாம் அறிவோம். செல்வத்தினால் செழித்தோங்கும் பெரும்

நாடான அமெரிக்கா
அமைதி குறைந்து தொ
இல்லாமல் பலர் கஷ்
பட்டு வருகின்றனர்.
இந்தியாவில் காந்
தனிப்பட்ட முறையில்,
தர்களின் உள்ளத்தை
தமாக்கி, சமுதாய அ
ப்பை மாற்றி அமை
வேண்டும் என விரும்பி

#### சமுதாயத்தை மாற்றியமைக்கும் கருத்துக்கள்

இக்காலத்தில் சமுத
த்தை மாற்றி அமை
கூடிய கருத்துக்களை
வாறு செயல் படுத்
வேண்டும் என்று சிந்தி
வேண்டும். விஞ்ஞான ச
னைகளிலே திறமை மிகு
மேல் நாடுகளிலும் ஆ
மாயிரம் ஆண்டுகளு
முன்தோன்றிய இந்தி
இலங்கை மக்களைக் கூ
எங்கள் கருத்துக்கப்ப
பட்ட சக்தியொன்று எ
ளையும், மற்ற நாடுகளை
திக் கொண்டிருப்பதை
பார்க்கின்றோம். அதி
வசமாக, வேகமான
நிலையில், பழமை வாய்
நாகரீகத்திலிருந்து ஆற்
சக்திகள் வற்றிப் போ
மல் எஞ்சியிருந்த ஆ
லில் உத்தம புருஷர்
வரை தோற்றுவிக்கச்
தது. அவர் தோற்ற
எங்கள் வாழ்க்கையை
உலக வாழ்க்கை
மாற்றியமைக்க கூடி
தன்மை கொண்டிருந்த
அதிஷ்ட வசமாக மகாத்
தோன்றி எங்களுக்கு
றல் வாய்ந்த சாதனத்
தந்துள்ளார்.

முதன் முதல் அரசி
கைப்பற்றி மாற்றம் செ
வேண்டிய அவசியம் இல்
இங்கே தான் வித்தியா
இருக்கிறது. காந்திஜி
கருத்து உலக சித்தா
கருத்துகளுக்கு வித்தி
மானது. அபேதவாதம்
கின்ற சோஷலிஸம், பெ
வுடமை, வேறு எந்த
சியல் கட்சிக்கும், அரசி
அதிகாரத்தைக் கைப்ப
மல் கொள்கையை செ
படுத்த முடியாத நிலை
உண்டும் மக்கள் மன
மாற்றம் உண்டாக்க, க
ஊட்டி, அவர்கள் மன
மாற்றி அமைத்து, தத்
த்தை செயல் படுத்து
தான் காந்திஜியின் த
வம். காந்திஜியின் தத்
ங்களுக்கும் மற்ற ஜன
கத்தத்துவங்களுக் கு மு
வேற்றுமை இதுதான்
கள் மனதைமாற்றி அ
கும் வேளையில் பிரியவே
டிய சூழ்நிலை உருவாகிற
சோஷலிசம் போன்ற
துவத்தில் ஈடுபட்டவர்
முதல் செய்வது என்ன!
கள் மத்தியில் சென்று
தல் என்ற ஏணியின் மூ
அதிகாரத்தைக் கைப்ப
தங்கள் தத்துவத்தைசெ
படுத்த முற்படுவர். ஆ
காந்தி என்ன செய்வார்.
கள் மனதை மாற்
தங்கள் கொள்
களை ஏற்கச் செய்து, ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தை காந்திஜி மறுத்தது ஏன்?

## ப்பிரகாஷ் விளக்கம்

**ந்துக்கு வருகை தந்துள்ள காந்தியின் சீடரும் சர்வோ லேவருமான திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண்நேற்று முன் யாழ்ப்பாணம் பிரசிங்கம் மண்டபத்தில் தமக்களிக்கப் ரவேற்பின் போது ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் தரப்படுகின்றது:**

--தொகுப்பு - கே. யோகநாதன்--

மெரிக்காவில்
து தொழில்
ர் கஷ்டப்
றனர்.
காந்திஜி
றையில் மனி
ாத்தை புனி
நாய அமை
அமைக்க
விடும்பினுர்.

5
கும்

சமுதாய
அமைக்கக்
கஙள எவ்
படுத்த
று சிந்திக்க
ஞான சாத
மை மிகுந்த
லும் ஆயிர
டுகளுக்கு
இந்திய,
ளைக் கூட,
ந்துக்கப்பாற்
ன்று எங்க
ாடுகளை முந்
ப்பதை நாம்
அதிஷ்ட
மான சூழ்
ம வாய்ந்த
ந்து ஆற்றல்
ப் போகா
த ஆற்ற
ருஷர் ஒரு
விக்கச் செய்
தோற்றம்,
க்கையையும்
கையையும்,
கூடிய
ண்டிருந்தது.
க மகாத்மா
நக்கு ஆற்
சாதனத்தை

ல் அரசியலை
ற்றம் செய்ய
யம் இல்லை.
வித்தியாசம்
காந்திஜியின்
சித்தாந்த
வித்தியாச
வாதம் என்
ஸம், பொது
எந்த அர
ம், அரசியல்
கைப்பற்று
யை செயல்
த நிலைமை
ள் மனதில்
ாக்க, கல்வி
ள் மனதை
து, தத்துவ
படுத்துவது
ின் தத்து
ன் தத்துவ
ஜனநாய
க்குமுள்ள
தான் மக்
ற்றி அமைக்
பிரியவேண்
டுவாகிறது.
பான்ற தத்
ட்டவர்கள்
என்ன! மக்
சென்றுதேர்
ியின் மூலம்
கைப்பற்றி
ந்தைசெயல்
வர். ஆனுல்
ய்வார். மக்
மாற்றி
ாள்கை
ந்து, சமுக

வாழ்வில் மறுமலர்ச்சியுண்டாக்கவிடும்பினுர். மக்களை தனிப்பட்ட முறையிலும், சிறு கூட்டங்களாகவும் சந்தித்து, காந்திஜி, வாழ்க்கையை திருத்தி அமைத்துக் கொள்ளக் கேட்டுக் கொள்வார்.

### காந்தியின் புரட்சி

காந்திஜி நடத்திய புரட்சிக்கும், மற்ற புரட்சிக்கும் வேற்றுமை உண்டு, மற்றவர்கள் புரட்சியினுல் வாழ்க்கை சமுதாயத்தை மாற்றி அமைப்புமுறையில் மாற்றம் ஏற்படுத்திஞர்கள் அவர்களின் புரட்சி ஒரே தன்மையாக இருந்தது காந்திஜி புறத்தில் மட்டுமின்றி அகத்திலும் மாற்றம் ஏற்படச்செய்தார் தனிப்பட்ட மனிதனையும், சமுதாயத்தையும் அகத்திலும் புறத்திலும் மாற்றம் ஏற்படச் செய்வதுதான் காந்திஜியின் புரட்சியின் வடிவம் சோஷலிஷகம்யூனிச வழியில் நெடுங்காலமாக அதிகாரத்திலிருந்த தத்துவங்கள் பேராசிரியர்கள் வழங்கிய அத் தத்துவங்கள் பல ஆண்டு காலமாகசெயல்படுத்தாமல் போய்விட்டன.

சோவியத் ரஷ்யாவில் 50 ஆண்டுக்கு மேலாக கம்யூனிஸம் நடைமுறையில் இருந்து வருகின்றது. எனினும் செக்கோஸ்லவாக்கியாவில் அவர்கள் செய்த அட்டூழியம் உலக மக்கள் அறிந்த விஷயம். கம்யூனிஸ தத்துவத்தின் சித்தாந்தத்தை உருவாக்கியவர்கள் ஏற்படுத்திய பண்புகளை மறந்து ரஷ்யா அட்டூழியம்செய்திருக்கிறது. மனிதாபிமான பண்பிற்கு புது உருவம் கொடுக்க முற்பட்டது குற்றம். இருபெரும் நாடுகளில் ஒன்ருன ரஷ்யா அந்த மனுதாபிமான முறையைச் சகிக்க முடியாத மக்களை நசுக்கமுற்பட்டது.

மேற்கத்தைய மற்றநாடுகளில் புறத்தில்பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அகத்தில் தோன்றிய உண்மைகளால் பல விபரீதங்கள் ஏற்பட்டன. பெரும் நாடான அமெரிக்காவில் நூற்றுக்கு 15 வீதம் பேருக்கு தொழில் இருந்திருக்கவில்லை.

காந்தி உயிர் பிரிவதற்கு முதல்நாள் எழுத்து வடிவத்தில் தந்த தீர்மானங்கள் இன்றுகூட செயல்படுத்தப்படவில்லை. அவரோடு அவரது தீர்மானங்களும் மறைந்து விட்டன. அவரின் அரசியல் வாதியான நேருகூட அதனை செயல்படுத்த எண்ணவில்லை. காந்திஜியை சொல்லி வாழ்ந்தார்களே ஒழிய அவரின் கருத்துக்களை செயல்படுத்த முன்வரவில்லை. அரசியல் சுதந்திரம் கிடைத்ததும் காங்கிரஸ் கட்சி மக்களுக்காக உலக சேவா சங்கமாக பணிபுரிய வேண்டுமென்பதும் காந்திஜி விரும்பினுர். ஆனுல் அவரது விருப்பம் ஈடேறவில்லை. தன்னுடன் விடுதலைக்காக போராடிய ஆயிரக் கணக்கான வீரர்களில் ஒரு பிரிவினர் அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்றும் மற்றப் பிரிவினர் மக்கள் மத்தியில் சென்று அவர்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்பதுதான் அவரது திட்டம். காந்திஜியின் திட்டத்துக்கு எதிர்மாருக ரஷ்யா, அமெரிக்கா போன்றநாடுகளின் சித்தாந்தத்திற்கு ஏற்றவகையில் அரசியல் பொருளாதார திட்டங்களை அமைக்கஅயல் நாடுகளிலிருந்துநிபுணர்களை வரவழைத்தார்கள்.

காந்திஜியின் வழியைக் கடைப் பிடிப்பவர்களில் பல தரப்பட்டவர்கள் இருந்தார்கள். அரசியல் பிரிவில் ஒரு சாராரும் நிர்வாக துறையில் ஒரு சாராரும் மற்றும் துறைகளிலும் பணியாற்றிஞர்கள். அவர்களில் விஞேபாஜி என்ற பெரியார் காந்திஜி உருவாக்க நினைத்த சமுதாய அமைப்பை ஏற்படுத்த முனைந்தார். காந்திஜி விட்ட இடத்திலிருந்து விஞேபாஜி பணியாற்ற ஆரம்பித்தார். என்னைப் போன்ற மார்க்கிச அபேத வாதங்களை பின்பற்றுபவர்களையும் இலகுவில் உணர்ச்சி வசப்படாதவர்களையும் ஈர்க்கக்கூடிய அளவில் அவரின் செயல்திட்டம் உருவாகி வருவதை காணக் கூடியதாயிருந்தது

### விஞேபா ஆரம்பித்தார்

52-ம் ஆண்டு விஞேபாஜி பூதான இயக்கத்தை ஆரம்பித்தார். நான் அதில் 53-ம் ஆண்டு சேர்ந்தேன். நான் விஞேபாஜியுடன் சேரும் நேரத்தில் என் தோழர்கள் கோபித்தார்கள் புறுபுறுத்தார்கள், எதிர்த்தார்கள். வாதித்தார்கள், நிலத்தை ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு சட்டம்தான் உதவியளிக்க வேண்டுமென்றும் வீடுவீடாகவும் கிராமம் கிராமமாகவும் நடந்து சென்று ஏழை மக்களுக்கு விமோசனம் அளிக்க முடியாதெதன அவர்கள் வாதாடிஞர்கள்

இவ் விஜயமாக விஞேபாஜியுடன் நீண்ட நேரம் விவாதித்து என் மனதை தெளிவுபடுத்திக் கொண்டேன் ஒருவார காலத்தில் 75,000 ஏக்கர் நிலத்தைப் பெற்றுக்கொண்டோம். இதற்கு சட்டம் வேண்டியதில்லையென்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டினேன். சட்டத்தின் துணை கொண்டு சாதிக்கலாம் என்று எண்ணுகின்ற காரியங்களை எளிதில் முடிக்க விஞேபாஜி வழி செய்து வருகின்ருர். இந்தியா சுதந்திரம் பெற்று 21 வருடங்களாகின்றது. பூதான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 14 வருடமாகிறது. இந்த இடைக்காலத்தில் சட்டத்தின் துணைகொண்டு எத்தனை ஏக்கர்நிலம் [illegible] களுக்கு பகிர்ந்தளிக்கப் [illegible] டிருக்கிறதென்பதுசிந்திக்கக் கூடியவிஷயம். இத்தத்துறையில் நேரு தீவிரமாக முயன்றுதோல்வியே கண்டார்.

அமெரிக்கா, ரஷ்யாவில் ஏராளமான நிலம் உண்டு. அங்கு 1 மனிதனுக்கு சராசரி 12 ஏக்கர்நிலம் உண்டு. இங்கு ஒருமனிதனுக்கு சராசரி 1 ஏக்கர் நிலம் கூட கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது.

### சட்டத்திஞல் முடியவில்லை

நிலத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்கு விரைவாக சட்டம் இயற்றி மாகாண முதலமைச்சர்கள் திட்டக் கமிஷன், நிர்வாக அமைப்புகளை அவசரமாகக் கூட்டிய நேரு அதில் வெற்றிகாணவில்லை. சட்டத்திஞல் மக்கள் பெற்றுக்கொண்ட நிலத்திலும் பார்க்க கூடியளவு நிலம் பூதான இயக்கத்தில் ஏழைமக்களுக்கு சட்டத்திஞல் ஒரு ஏக்கர் நிலத்தை பகிர்ந்தளிப்பதற்கும் பல கஷ்டங்கள் எதிர்நோக்கின. ஆனுல் பூதான இயக்கத்திஞல் 3 லட்சம் 60 ஆயிரம் ஏக்கர் நிலம் ஏழைமக்களுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மக்கள்அதிகமாக உள்ள பிரதேசம் உத்தரப் பிரதேசம். அங்கு சட்ட மூலம் 10 ஆயிரம் ஏக்கர் நிலம்தான் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனுல் பூதான இயக்கத்தின் மூலம் 3 லட்சம் ஏக்கர் நிலம் ஏழைகளுக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியில் வருமான மந்திரி 6000 ஏக்கர் நிலம், உடைமை எல்லை சட்டத்தின்படிகிடைக்குமென எதிர்பார்த்தார். ஆனுல் ஒரு ஏக்கர் கூட பகிர்ந்தளிக்கப்படவில்லை. பூதான இயக்கத்தின் மூலம் 30 ஆயிரம் ஏக்கர் நிலம் ஏழைமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இவை போன்றுதான் இந்தியாவின் மற்றப்பகுதிகளிலும் நடந்துள்ளது. இதனைஎன் சோஷலிஸ் நண்பர்களிடம் கேட்டால் விடைசொல்ல முடியாது திண்டாடுகிருர்கள்.

விஞேபாஜி ஆரம்பித்த பூதான இயக்கம்விரிவுபட்டு கிராமதான இயக்கமாக வளர்ந்தது. உலக ஜனநாயகத்தில் இருக்கும் நிலை என்ன? மக்கள் தங்கள் வாக்குகளை போட்டபின் அவர்களுக்கு பங்கு இல்லாத சூழ்நிலைதான். இன்று ஜனநாயக பாதையில் மக்களுக்காக அரசாங்கம் இருக்கக் கூடும். ஆனுல்மக்கள்ஆட்சி பெறுகின்ற ஜனநாயகம் உலகில் செயல்பட்டுக் கொண்டிருக்கவில்லை.

அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் உருவாகிய புது இடதுசாரி கொள்கைகள் என்ன? காந்திஜி சுயராஜ்யம் என்ற நூலில் பலஆண்டுகளுக்கு முன் இந்தியாவை கிராமமயமாக்கி சுதந்திரமாக இருக்கவேண்டும்.என்ருர். புது இடதுசாரிகளின் கொள்கை அதில் ஒளிவிடுவதைக்காணலாம். இந்த மாதிரி ஜனநாயகத்தைஎவ்வாறு உருவாக்கலாம். கிராம மக்களிடம் சட்டத்தைக் கொடுத்தால் அவர்களுக்குள்ள அறிவு நிலையில் அதனை செயல்படுத்துவார்களா?

காந்திஜி கிராமசுயராஜ்ய கனவு கண்டார். அதனை செயல்படுத்த அரசாங்க அதிகாரத்தையோ [illegible] உதவியைப் பெற அவர் விரும்பவில்லை. நேருமூலம்

இதனை சட்டபூர்வமாக செய்திருக்க முடியும். சட்டபூர்வமாக கிராம சுயராஜ்யம் அமைக்க காந்திஜி விரும்பவில்லை. தான் உருவாக்க நினைத்த உலக சேவா சங்க தொண்டர்களை மக்கள் மத்தியில் அனுப்பி புதிய சமுதாயத்தை உருவாக்கவே அவர் விரும்பினுர். அதிகாரிகளை அனுப்பி சட்டத்தின் துணைகொண்டு கிராம சுயரராஜ்யத்தை அமைக்க அவர் விரும்பவில்லை.

### கிராமிய வாழ்வு

இன்று இந்தியாவில்கிராம நிலைமிகவும் கஷ்டமாகஇருக்கிறது. கிராமமக்களிடையே பிளவு, போட்டிமனப்பான்மை, சாதிப்பிரிவு, தலைதூக்கியுள்ளது. டெல்லியிலுள்ள அத்தனை தீமைகளும், கிராமங்களுக்கு பரவியுள்ளது. ஒரு பஞ்சாயத்து தேர்தலுக்கே பத்தாயிரம் ரூபா செலவு செய்யக்கூடிய சீர்கெட்டநிலையில் கிராமம் இருப்பதைக் காண்கின்ருேம். ஒருவருக்கொருவர் சந்தேகம்கொண்டும் போட்டிபோட்டுக் கொண்டுமிருந்தால் முன்னேற முடியாது. அமைதியான முறையில் சமாதானத்தை ஏற்படுத்த முயலவேண்டும். தாம் தனித்து எதனையும் செய்துவிடமுடியாது. மற்றவர்களுடன் இணைந்து சமாதான முறையில் ஒருவருக்கொருவர்விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பழகிஞல் அதிகபலன் உண்டு. இந்த நிலைமை உருவாகாவிடில் நாம் அமைதியைக் காணவோ உருவாக்கவோ முடியாது. சிறந்த சமுதாய அமைப்பை ஏற்படுத்த முடியாதபோது பெரிய பிரச்னையை எப்படி தீர்க்கமுடியும்.

---

### 43 பிழைகள்?

பருத்தித்துறை, வெள்ளி அரசாங்க வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 7-ம் வகுப்புக்குரிய ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் 43 பிழைகள் காணப்படுகின்றனவாம்.

இனி வெளிவரவிருக்கும் 10 ம்வகுப்புக்கானஆங்கிலப் புத்தகத்திலும் பிழைகள் மலிந்திருக்கக் கூடுமென ஆங்கில ஆசிரியர் அஞ்சுகின்றனர்.

---

(11-ம் கலத் தொடர்ச்சி)

இ. போ. ச. வருவாய் காட்டவேண்டியது நல்லது தான். ஆனுல் அதேசமயம் பிரயாணிகளின் நலனையும் சௌகரியத்தையும் பார்க்க வேண்டாமா? பஸ் சேவைகளை தேசியமயமாக்கியதின் நோக்கமே இது தான். ஆனுல் தனிப்பட்டவர்கள் பஸ்சேவைகளை நடத்தியபோது பொதுமக்கள் இவ்வளவு கஷ்டப்படவில்லை என்றே பலரும் பேசிக்கொள்கிருர்கள்.

யாழ்ப்பாணத்திலே கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் முதலிய இடங்களில் டிப்போக்கள் இருக்கின்றன. அந்தந்த டிப்போக்களில் இருந்து புறப்படும் பஸ் வண்டிகளின் பாதை, நேரம் முதலியவற்றை டிப்போவில் இருப்பவர்களே தயார் செய்கிருர்கள். சில டிப்போக்கள் நல்ல பெயரும் சில டிப்போக்கள் கெட்ட பெயரும் வாங்குவதேனோ?

டிப்போக்களுக்கு மேலதிகாரியாக பிராந்திய மனேஜர் ஒருவர் இருக்கிருர். பொது மேற்பார்வை இவருடைய பொறுப்பு. பஸ் சீரழிவைப்பற்றி வெறுப்பு தெரிவிப்பவர்கள் இவருக்கோ அல்லது இவருக்கும் மேலதிகாரியான கொழும்பிலிருக்கும் இ. போ. ச. பிரதம 'ஒப்பறேஷன்ஸ்' மானேஜருக்கோ தங்கள் குறைபாடுகளை தெரிவிக்க வேண்டும்.

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்.

—வழிப்போக்கன்

---

## நாட்டிலும் நகரிலும்

அன்ருெருநாள் சில தினங்களுக்கு முன்னர்தான் மத்தியானம் பதிஞென்றரை மணி தொடக்கம் இரண்டு மணிவரை யாழ்ப்பாணம் பஸ் காலையில் தவம் கிடந்தேன். வெய்யில் சூடு ஒரு பக்கம், பசி ஒருபக்கம் என்னைப் பிடுங்கி தின்றன. வெறும் வெளியில் நிற்கலாம். பஸ் காலையிலுள்ள கியூ வரிசைகளில் நிற்பது உடம்புக்கு ஒத்துவராது. தலைக்கு மேல்ஆக ஓரடி உயரத்தில் தகதகக்கும் தகரம், அரைமணி நேரம் சேர்ந்தாற்போல அதில் நின்றவுடனே மயக்கம் வந்துவிடுகிறது.

எனக்கு மட்டுமல்ல இந்த வேதனை, என்னுடன் கூட பலர் நின்று அவஸ்தைப்பட்டார்கள். இவர்களில்பெரும்பாலோர் ஆஸ்பத்திரிக்கு வந்துபோகிறவர்கள், இருதய வியாதியுள்ள வயோதிபர்கள், பிரசவ வேதனையுடன் நிற்கும் பெண்கள், சிறுவர்கள் சிறுமிகள் எல்லோரும் இ. போ. ச. தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்து கொண்டு நின்ருர்கள்.

ஓர் அன்பர் தமது மனைவியை பிரசவத்துக்காக ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு பன்னிரண்டு மணி பஸ்ஸில் வீட்டிலிருந்து தமக்கும் மனைவிக்கும் சாப்பாடு வரும் என்று காத்துக்கொண்டு நின்ருர். ஒரு மணிக்கு முன்பு சாப்பாடு வந்துசேராவிட்டால் ஆஸ்பத்திரிக்குள் போக முடியாது. அவர் வேண்டுமாஞல் வெளியே கடைகளில் சாப்பிட்டுக் கொள்ளலாம். மனைவிக்கு என்ன செய்வது என்று தடுமாறிஞர். ஒருமணியும்வந்து போய்விட்டது. அவர், என்ன செய்தாரோ தெரியாது.

இதற்கிடையில் கிளிநொச்சியிலிருந்து காரைநகருக்கு போகும் பஸ் ஒன்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது. அதில் என்ன ஆச்சரியம்! காரைநகருக்கு போகிறவர் ஒரு குருவியாது காணப்படவில்லை!

யாழ்ப்பாணம் பஸ் காலையிலிருந்து கண்டிருேட் வழியாக பத்து பதினைந்து நிமிடத்துக்கு ஒரு தடவையாவது ஒரு பஸ் போய்க் கொண்டேயிருக்கிறது. மன்ஞர், திருக்கோணமலை, அநுராதபுரம், முல்லைத்தீவு, கிளிநொச்சி வவனியா இங்கெல்லாம் பஸ் ஓடுகிறது. ஆனுல் யாழ்ப்பாண குடாநாட்டுக்குள்ளே ஓடும் பஸ் குறைவாயிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து நவாலி, சங்கரத்தை, மூளாய் முதலிய இடங்களுக்குப் போகிறவர்கள் பாடு தான் மிகவும் அவலமானது. இந்தப் பாதையில் ஓடும் வண்டிகள் மிகக் குறைவு. மணித்தியாலத்திற்கு ஒன்று தான் ஓடுகிறது. அதுவும் லொட லொட வண்டிகள். ஒருபஸ் முறிந்து விழுந்து விடுமாஞல் இரண்டு மணி நேரம் காத்து நிற்கவேண்டும்.

காரைநகரிலிருந்து நேரடியாக வவனியாவுக்கும், கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவிற்கும் பஸ் ஓடவேண்டியதற்கு என்ன அவசியம் என்று இவர்கள் கேட்பது நியாயமென்று தோன்றுகிறது.

இதுபற்றி விசாரித்த போது இப்படி நெடுந்தூர பஸ்ஸுகளை ஓடவிட்டால் கொலக்ஷன் அதிகமாகக் காட்டலாம் என்பதற்காக டிப்போவில் இருக்கும் அதிகாரிகள் அப்படிச் செய்கிருர்கள் என்று ஒரு பிரயாணி கூறிஞர்.

(10-கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

### கண்டனம்

ஈழத்து தமிழ் அறிஞர்களுக்கும் புலவர்களுக்கும், ''கௌரவ டாக்டர்'' பட்டம் வழங்கும் விஷயம் குறித்து இதுகாலவரை நடவடிக்கைகள் எடுக்காது அசட்டை பண்ணி வந்த இலங்கைப் பல்கலைக்கழக அதிகார பீடத்தைத் மட்டுநகர் முதலாவது ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரையும் - மூதூர் இரண்டாவது ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ. எல். மஜீத்தும் கண்டித்துள்ளனர்.

0 0

### சுதந்திரதினவிழா

இலங்கையின் 21-வது சுதந்திரதின விழா இம்முறை காலியில் நடைபெறவிருக்கிறது. இதனை முன்னிட்டு பழைய வாகன ஊர்வலமும், ''சுதந்திர ராணி'' தெரிவும் நடைபெறவுள்ளன.

0 0

### 131 பிள்ளைகள் 2 ஆசிரியர்கள்

மட்டக்களப்பு ஆயத்தியமலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தளபாட வசதிகளும் நீர் விநியோகமும் தட்டுப்பாடாக இருப்பதாகப் புகார் செய்யப்படுகிறது, இப்பாடசாலையில் 131 பிள்ளைகள் படிக்கிறார்களாம். ஆயினும் இரண்டே இரண்டு ஆசிரியர்கள் தான் இங்கு கடமையாற்றுகிறார்களாம். 65 பெண் பிள்ளைகள் படிக்கும் இப்பாடசாலைக்கு ஒரு பெண் ஆசிரியராவது நியமிக்கப்படாதது குறித்து பெற்றோர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

0 0 0

### விலை குறைப்பு

பெரிய வெங்காயம் 32சதமாக குறைந்துள்ளது. ருத்தல் 40 சதத்திலிருந்து 32 சதமாக பெரிய வெங்காயத்தின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக உணவு இலாகா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது,

0 0 0

### பின்போடப்பட்டது

அகிலஇலங்கை தமிழாசிரியர் சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக ஆசிரியர் தொழிற் சங்க உத்தியோகத்தர்களது இடமாற்றங்கள் 1-4-69 வரை பின்போடப்பட்டுள்ளன.

### புதிய சேவை

கொழும்புக் கோட்டைக்கும் -பூக்கொடைக்குமிடையில் புதிய பஸ்சேவையொன்றை இ. போ. சபை நேற்று ஆரம்பித்தது

இச்சேவை பத்து நிமிடத்துக்கொருமுறை நடைபெறும்.

### 'மூன்று மொழியிலும்'

பஸ்களுக்கான பூரண நேரசூசியொன்றை மூன்று மொழிகளிலும் வெளியிடுமாறு நியமன அங்கத்கவர் திரு. அண்ணாமலை தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 11—1—69

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை — ஆர். சிவசுப்பிரமணியம், 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை — சங். சகோ. தோமஸ் பெர்னண்டோ, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அன் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர் — தயாரிப்பு வானொலி அக்கா.

இரவு 6-15 சங்கீதபாராயணம் — நடாத்துபவர் மணிபாகவதர், 6-30 பேச்சு — திருப்பாவை எஸ். தனபாலசிங்கம், 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 வானொலி குறுக்கெழுத்துப்போட்டி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 நாதஸ்வரம் — எம். ராஜையா.

## ஜீவனும்ச வழக்கில் 4 மாத கடூழியம்

அளவெட்டி, வெள்ளி

ஜீவனும்சம் கட்டத் தவறியவருக்கு நான்குமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது;

ஏழாலையைச் சேர்ந்தநேசமலர் என்பவர் தம்மை விட்டுப் பிரிந்த கணவர் கே. பூபாலசிங்கம் தமக்கு ஜீவனும்சப்பணம் கட்டவேண்டுமெனக் கோரி ஒரு வழக்கை மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இவ் வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது இவர் ஜீவனும்சம் கட்டத் தவறி விட்டதாக தெரியவந்தது.

இதையடுத்து நீதிபதி எம் சண்முகலிங்கம் பிரதிவாதிக்கு நான்குமாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்-

வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆர், ஜே. செல்வரத்தினம் ஆஜராகி இருந்தார்.

## புதிய சங்கிஸ்தான்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு அர்ச். தொம்மையப்பர் தேவாலயத்தின் சங்கிஸ்தானும் பூசை ஆராதனை முதல்வருமாறு35 ஆண்டுகள் இருந்துவந்த சில்வஸ்ரர் அந்தோனி முத்துவின் மரணம் காரணமாக திரு. கஸ்பார் செல்வம் அத்தேவாலயத்தின் சங்கிஸ்தானாகவும் பூசை ஆராதன முதல்தராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பல வருடங்கள் அரசாங்குமாஸ்தாவாக இருந்த இவர் கடந்தமாதம் 28ந்திகதியில் இருந்து தமது சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

## மாணவருக்கு பர்ராட்டு

அராலி, செவ்.

அராலிதெற்கு செம்பிதோட்ட வைரவராலய பஜனை மன்றத்தினர் தமது சமயபாட வகுப்பு மாணவருக்கு பரிசு வழங்கும் விழாவைக்கொண்டாடினர். பரிசில்களை 'ஈழநாடு' ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் அவர்கள் வழங்கி மாணவர்களையும் வாழ்த்தினார்.

விழாவில் மாணவர் பேச்சுக்களும் சங்கீத காலாட்சேஷபமும் இடம்பெற்றன.

'சிறுபராயத்தில் இந்த விதமாக திறமையுடன் சமயவிடயங்களை விளக்கிப் பேசும் இம்மாணவர்கள் தமது பிற்காலத்தில் நல்ல சமயப்பற்றுடையவர்களாய் வருவார்களென்பதில் ஓர் ஐயமுமில்லை' என்று திரு. ஹரன் மாணவர்களையும் ஆசிரியர்களையும் வாழ்த்தினார்(

## எம். எல். ஏ, காலமானர்

சென்னை, ஜன. 10

தமிழ்நாடு சட்டசபையில் சாத்தூர் தொகுதியின் சுதந்திரக் கட்சி அங்கத்தவரான திரு' ராமசாமி நாயுடு மாரடைப் பினால் நேற்றுக் காலமானார்.

## இன்றைய பலன்

சனிக்கிழமை
(11-1-69)
மார்கழி மீ, 28 வ

திதி- அட்டமி இரவு 2.35 மேல் நவமி

நட்சத்திரம்- அத்தம் காலை 7-50 மேல் சித்திரை

ராகுகாலம்- 9-33 11-03 சுபநேரம் - 3-33 5-03

இன்று பிறந்தவர்களுக்கு- மனதுக்கு நிம்மதி அளிக்கக்கூடிய சம்பவங்கள் நிகழும் நீண்டநாள் தடைப்பட்டிருந்த திருமணமொன்று விரைவில் நடைபெறும். பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும். முதியவர் ஒருவரின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். வைத்தியத் துறைக்குப் பிரகாசமான ஆண்டு. கால்நடைகள் வளர்ப்பவர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். வழக்கு விவகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். போக்குவரத்தில்பொருள் நழுவக்கூடும். பிரயாணங்களை முடிந்தவரை தவிர்க்கவும்.

மேடம்- நம்பிக்கெடுதல், மோசடி நடக்கும்

இடபம்- தெய்வ குரு பக்தி, தேடியது கிடைக்கும்.

மிதுனம்- உத்தியோகச் சிறப்பு, உல்லாச விருப்பு

கடகம்- மக்கள் நலன், வெளியிடத்து தொடர்பு.

சிங்கம். சிந்தனைக் கிலேசம், சிநேகிதர் பகை

கன்னி- ஆசை ஆலைகள், அவப்பெயர் உண்டு.

துலாம்- வார்த்தை ஜாலம், வசிகரப் பார்வை

விருச்சிகம்- ஆசைவைக் காதே, அவதிப்படாதே.

தனுசு- அன்னையின் ஆசி அனைத்திலும்வெற்றி.

மகரம்- நல்ல செய்தி, நலன்கள் சேரும்.

கும்பம்- வேவுக் கணை தொடுப்பர், விழிப்புடன் இரு.

மீனம்- தாம்பத்தியம் சிறக்கும், தனமும்சேரும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை வேலுப்பிள்ளை**

## நாடகத்திற்கு சென்றவர்கள் வீடுகளில் களவு

### துறைமுகத்தில் பொலிசார் சோதனை

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு கரையோரப் பகுதியில் நடைபெற்ற நாடகம் ஒன்றைப் பார்க்கச் சென்றவர்களின் வீட்டில் கள்வர் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். இரண்டு வீடுகளில் புகுந்த கள்வர் 2000 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடி விட்டனராம்.

இரண்டு ரேடியோக்கள் ஒரு சயிக்கிள், விலையுயர்ந்த சேலைகள், புதிய நைலோன் வலைகள் ஆகியவை களவுபோய் விட்டதாக நெடுந்தீவு பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக புலன் விசாரணை செய்யும் பொலிசார், மோட்டார் படகில் பிரயாணஞ் செய்பவர்களின் பொருட்களையும் சோதனை செய்கிறார்கள்.

## சடலத்தை கொண்டு சென்றவர் சடலம் கரைசேர்ந்தது

நெடுந்தீவு, வெள்ளி

யாழ்ப்பாணத்தில் இருந்து தமது பேரனின் சடலத்தை வள்ளம் ஒன்றில் நெடுந்தீவுக்குக் கொண்டு வந்தபோது நெடுந்தீவுக் கடலில் தவறி வீழ்ந்து மரணமானவரின் சடலம் நெடுந்தீவு கிழக்கு முள்ளி வைரவர் கோவில் கடற்கரையில் கரைவந்து சேர்ந்தது.

பொலிசாரின் விசாரணைகள் முடிய நெடுந்தீவு மரண விசாரணை அதிகாரி திரு. க. இராமநாதன் விசாரணை நடத்தினார். இறந்த விசுவலிங்கம் கார்த்திகேசுவின் தம்பியாரான விசுவலிங்கம் நடராசா, மாமனான வயித்தியநாதன், பெரியதந்தையான க. ஆறுமுகம், அயல் வீட்டவரான இ. பேரின்பநாயகம் ஆகியோர் சாட்சியமளித்தபின்னர் கடலில் தற்செயலாக தவறி வீழ்ந்தமையால் மூர்ச்சையாகி இறந்தார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில்

## அனுமதிக்கபபட்ட இளம் பெண் ஒருவருடன் மறைந்தாராம்

யாழ்ப்பாணம், சனி

மண்ணெண்ணை குடித்து விட்டதாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவரைக் காணவில்லை.

தனக்கு விவாகம் பேசியிருந்தவரை விவாகம் செய்து தரும்படி இவர் தமது பெற்றோரைக் கேட்டிருந்ததாகவும், தாங்கள் கடந்த திங்கட்கிழமை கோவிலுக்குச் சென்றிருந்த சமயம் தனது மகள் எலிசபெத் மண்ணெண்ணையைக் குடித்து விட்டதாகவும் இதனால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும்தெரிவித்த அவரது தகப்பனார் மரியான் இராசலிங்கம் மரியதாஸ் என்பவர் தங்களது மகளை ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தியிருக்கலாமென பொலிசில் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிசார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எலிசபெத் என்ற இளம் பெண்ணை ஊர்காவற்றுறையிலுள்ள வீடொன்றில் வைத்து விசாரணைக்குட்படுத்தினர். விசாரணை தொடருகிறது. (ந. நி.)

## ஒத்திவைப்பு

அளவெட்டி ,வெள்ளி

ஹரிஜனர் ஒருவரைத் தாக்கிய வழக்கில் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டதைத் அடுத்து வழக்கு ஒத்திப் போடப்பட்டது.

காங்கேசன்துறை வீதியில் காங்கேசன்துறை மரக்காலைக்கு முன்வைத்து ஹரிஜனரும் அரியாலை வாசியுமான சி. கணேசனைத் தாக்கியதாக ஒருவர்மீது குற்றம் சாட்டி காங்கேசன்துறை பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்திலொரு வழக்கைத்தொடர்ந்திருந்தனர்

இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம்.சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளம்பட்டபோது எதிரி சுகயீனமாக இருப்பதால் கோர்ட்டில் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக் பட்டது.

இதை அடுத்து நீதிபதி வழக்கை ஒதிவைத்தார்.

இவ்வழக்கில் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகி இருந்தார்.

எதிர் வரும்
30 வது ஆண்டுவிழாவை
முன்னிட்டு
1-1-69 . முதல்...
அரைச்சலார்
கொழும்பு
ஸ்ருடியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம், வசாவிளான் கோஷ்டிகள் வென்றன

அளவெட்டி, வெள்ளி

குரும்பசிட்டி உதய தாரகை மன்றத்தின் சார்பில் நடைபெற்று வரும் 11-வது ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முதலாம் பிரிவில் மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக்கழகமும் வசாவிளான் இளைஞர் விளையாட்டுக் கழகமும்மோதியபோது மாவிட்டபுரம் வென்றது.

இப்போட்டி ஆரம்பமுதல் இறுதிவரை ரசிக்கக் கூடியதாகவும் விறுவிறுப்பாகவும் காணப்பட்டது.

மாவிட்டபுரம் கோஷ்டியின் சார்பில் முன்னணி வீரர் இலகுநாதன் மிகவும் சாதுர்யமாக முதலாவது கோலைப்போட்டார்.

இடைவேளையின் பின் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தது. இடைவேளைக்குப் பின் வசாவிளான் கோஷ்டியைச் சேர்ந்த வீரர் பத்மநாதன் 1 கோலைப்போட்டார்.

இதையடுத்து புதியதெம்புடன் ஆடியமாவிட்டபுரம் கோஷ்டியின் சார்பில் மீண்டுமொரு கோலைஇலகுநாதன் போட்டார். இறுதியில் மாவிட்டபுரம் 2-1 கோலால் வென்றது. இப்போட்டிக்குதிரு. ரி. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

இச்சுற்றுப் போட்டியில் நடைபெற்ற மற்றும் சில போட்டி முடிவுகள்:

**வசாவிளான் வெற்றி**

ஏழாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வசாவிளான் இளைஞர்கழகமும் மோதிய 1-ம் பிரிவுப் போட்டி ஒன்றில் வசாவிளான் 3-1 கோலால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. சு. நடராசாமத்தியஸ்தம்வகித்தார்.

கட்டுவன் பாலர் ஞானோதய விளையாட்டுக் கழகமும் வசாவிளான் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிய மற்றொரு 1ம்பிரிவுப் பேட்டியில்வசாவிளான் 3-0 கோலால்வென்றது.

இப்போட்டிக்கு திரு. ரி. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## வீட்டுத் தோட்டப் போட்டி

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்பு இளைஞர் விவசாயக் கழகத்தினர் வீட்டுத் தோட்டப் போட்டியொன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர். போட்டி இரண்டு பிரிவாக நடைபெறும். முதலாம் பிரிவு 18 வயதிற்கு உட்பட்டவர்கள் மத்தியிலும் இரண்டாம் பிரிவு 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் மத்தியிலும் நடைபெறும். போட்டியில் கலந்து கொள்பவர்கள் பின்வரும் பயிர்களை நடுதல் வேண்டும். மிளகாய், வெங்காயம், மரவெள்ளி, உள்ளூர்மரக்கறிவகை, மேல்நாட்டு மரக்கறி, இலை மரக்கறி வகை, உருளைக்கிழங்கு, நிலக்கடலை, இப்போட்டிகளுடன் மாட்டுச்சவாரிப் போட்டி, பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிபோன்றவையும்நடைபெறவிருக்கின்றன. போட்டி விண்ணப்ப முடிவு 25-ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. கமத்தொழில் பகுதியினரின் உதவியுடன் நடைபெறும் இப் போட்டியில் பல விலை உயர்ந்த பரிசுகள் வழங்கப் படவிருக்கின்றன. போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் செயலாளர் திரு. ச. செல்வரத்தினம் கவனித்து வருகின்றார்.

## வடமராட்சி வெற்றி

பருத்தித்துறை, வெள்ளி

யாழ். சென்மேரிஸ்கோஷ்டிக்கும் வடமராட்சி தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், வடமராட்சிக் கோஷ்டி 1-0 கோலால் வெற்றி பெற்றது. இரத்தினசிங்கம், சிறீதரன், கந்தசாமி ஆகியோரின் விளையாட்டு பாராட்டத்தக்கது.

திரு.கே. இரத்தினசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## பஸ் தொழிலாளர் கூட்டம்

அளவெட்டி, வெள்ளி

இலங்கை பஸ் தொழிலாளர் கழக நிர்வாகசபைக் கூட்டம் இம்மாதம் 16-ந் திகதி மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது.

67—68-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கை பற்றியும், மற்றும் பல விஷயங்களும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது,

## 'கடுகதி' என்றால் என்ன?

சுன்னாகம், வெள்ளி

காங்கேசன்துறைக்கும்-யாழ்ப்பாணத்துக்கும் இடையே பிரதானவீதி வழியாக 'கடுகதி' என்ற பெயர் பலகையுடன் இ. போ. ச. பஸ்கள் ஓடுகின்றன, இது ஊரைக்குறிக்கிறதா அல்லது பஸ்ஸைக் குறிக்கிறதா என மக்கள் திண்டாடுகின்றனர். இதுபற்றி சுன்னாகம் வடக்கு சனசமூக நிலையம் இ.போ.ச. மனேஜருக்கு அறிவித்துள்ளது.

## வாலிபரின் பரிதாப முடிவு

அளவெட்டி, வெள்ளி

குப்பிளானைச் சேர்ந்த சுப்பையா பாலசிங்கம் என்ற 25 வயது வாலிபன் வாழ்க்கையில் வெறுப்புற்று குப்பிளானில் உள்ள ஒருமயானத்தில் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இம்மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. சுந்தரமூர்த்தி விசாரணை நடத்தினார்.

மரண விசாரணையின் போது இறந்தவர்வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தான் வீட்டைவிட்டு வெளியேறி மயானத்தின் மடத்தில் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டாரெனத் தெரிய வந்தது.

இறுதியில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## சுகாதாரப் பகுதிக்கு மகஜர்

பருத்தித்துறை, வெள்ளி

வடமராட்சி சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழர் சிலர் வீடுகளுக்குட்சென்று டீ. டீ. ரி. அடிப்பதற்குசில வீட்டுகாரர்கள்சம் மதிப்பதில்லையென்றும் யாழ்ப்பாணப் பகுதியில் வேலை செய்வது சிரமமென்றும் தங்களை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியில் மாற்றி விடுமாறும் சுகாதாரப்பகுதி அதிபருக்கு ஒரு மகஜர், அனுப்பியுள்ளனர். கிளிநொச்சி, வவுனியா அனுராதபுரம் ஆகிய இடங்களில் கடமையாற்ற இவர்கள் விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

விளையாட்டுச் சங்க

## உத்தியோகஸ்தர் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கிரிக்கெட் விளையாட்டு மத்தியஸ்தர் சங்க தெரிவு சென்ற கிழமை நடைபெற்றபோது பின்வருவோர் இவ்வருட புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்:

தலைவர்: டாக்டர் கே. கணேசன், உப-தலைவர்கள்: திருவாளர்கள் ஏ. சுப்பிரமணியம், வி.கே.கந்தையா, பவி செல்லத்துரை, ஜே. ஐ. ராஜரட்ணம், வண. பிரான்சிஸ் யோசப், காரியதரிசி: சற் சிங்கராயர், உப-காரியதரிசி, தனாதிகாரி: வி. தியாகராசா, கணக்குப் பரிசோதகர்: இ. கே. குமரையா.

திருவாளர்கள் பி. மகேந்திரன், ஐத்துரகுலசிங்கி, கே. கிருஷ்ணன், கே. சிவலிங்கம் ஆகியோர் கொண்ட உப குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (தே. நி)

## மறைந்தனராம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

1968—69-ம் ஆண்டுக்கான வேலணைக் கிராமசபையின் வரவு செலவுத்திட்டம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அறிக்கை நிராகரிக்கப்பட்டது, ஆறுஅங்கத்தவர்கள் எதிர்த்தும் இரண்டு அங்கத்தவர்கள் ஆதரித்தும் வாக்களித்தனர். ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட இக் கிராமசபையில் விவாதத்தின்போது ஒருவர் திடீரென மதுறந்துவிட்டாராம்.

## நோயாளர் கஷ்டம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

வேலணையிலுள்ள அரசாங்க டிஸ்பென்சரியில் நோயாளா அதிகம் செல்வதனால் இங்கு கடமையாற்றும் ஒரேயொரு அப்போதிக்கரி நிலைமையை சமாளிக்க முடியாத நிலையில் இருக்கின்றாராம். அப்போதிக்கரிதான் இங்குள்ள பிரசவ விடுதியையும் கவனிக்கின்றார்.

## மீண்டும்சேவை

நெடுந்தீவு, சனி

கடந்த சில தினங்களுக்கு முன் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு நெடுந்தீவில் இருந்து புறப்பட்டபோது எஞ்சின் கோளாறுகாரணமாகப் பழுதடைந்த 'சில்வஸ்பிரே' மீண்டும் திருத்தப்பட்டு நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட்டு வருகிறது. இதற்கிடையில் ஒரு சுக்கான் முறிந்த அலையரசியும் அவசியம் தேவைப்படும் போது சேவைசெய்து வருகிறது.

## இ, போ. சபைக்கு பாராட்டு

சுழிபுரம். வெள்ளி

சுழிபுரம் கிராமசபைப் பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் இ. போ. ச. பகுதியினர் 784-ம் இலச்கபாதை பஸ்சேவையை மீண்டும் சுழிபுரம் வட்டுக்கோட்டைப் பாதை வழியாக விட்டமைக்காக நன்றி தெரிவித்து ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி வடபகுதிப் பிராந்திய மனேஷர் சபைத் தலைவர் ஆகியோர்களுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## அமராதேவிஸ்தம்பிதம்

பூநகரி: வெள்ளி

பூனகரி சங்குப்பிட்டி, கேரதீவுத் துறைமுகங்களுக்கிடையில் சேவையில் ஈடுபட்டிந்த யந்திரப்படகு 'அமராதேவி' இருமாதகால [illegible] பிரயாணிகள் கஷ்டப்படுகின்றனர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

# இருதரப்புக்கும் இத்தாலி ஆயுதம் கொடுக்காது

இஸ்ரேல், அரபுநாடுகள் ஆகிய இருதரப்புக்கும் ஆயுதங்கள் கொடுப்பதில்லையென்ற தனது கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று இத்தாலி அறிவித்துள்ளது. மேற்காசியாவில் அமைதி நிலவுவதற்காகவே இந்தக் கொள்கையைக்கடைப்பிடிப்பதாக இத்தாலி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# இஸ்ரேல் அணுகுண்டு தயாரிக்கிறதாம்

இஸ்ரேல் அணுகுண்டு தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பதாக உலகநாடுகள் பலவற்றில் அபிப்பிராயம் நிலவுவதாகத் தெரிகின்றது. ஆனல் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் தயான் இதை முற்றாக மறுத்திருக்கிறார். இஸ்ரேல் அணுகுண்டு தயாரிக்கும் முயற்சியில் இறங்கவேயில்லை யென்று அவர் மறுத்திருக்கிறார்.

உலக சந்தைகளில், அணுகுண்டு தயாரிப்புக்குத் தேவைப்படும் முக்கியப் பொட்களை சமீபகாலமாக இஸ்ரேல் அதிகமாக வாங்கி வருவதாகவும், அணுகுண்டு தயாரிப்பில் இஸ்ரேல் முழுமூச்சாக இறங்கியிருப்பதை இதுகாட்டுகிறதென்றும் உலக அரங்குகளில் கதை அடிபடுகிறது.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதில்லையென்று பிரான்ஸ் செய்திருக்கும் முடிவு தமது நாட்டை ஓரளவுக்கு பாதித்தபோதிலும் பெரிய கஷ்டத்தை ஏற்படுத்திவிடாது என்று ஜெனரல் தயான் கூறியுள்ளார். இஸ்ரேல் தனது பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் செய்வதில் முன்னேறியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# கீரிமலையில் அமைச்சருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு

அளவெட்டி, வெள்ளி

இம்மாத இறுதியில் வடபகுதி விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் உள்ளூராட்சி அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பளிப்பதென தெல்லிப்பழைக் கிராமசபை முடிவுசெய்துள்ளது.

மேற்படி சபைத் தலைவர் ம. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற சபையின் விசேஷ கூட்டமொன்றிலேய இம்முடிவு எடுக்கப் பட்டது.

கீரிமலைக்கு விஜயம் செய்யும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா கீரிமலை நவீனநகர்த்திட்டங்களைப் பார்வையிடுவதோடு நவீன நகருக்கான கல்லை திரைநீக்கம் செய்வார்.

அமைச்சர் திராவிட சிற்ப வேலைப்பாடுஅமைந்தமண்டபத்தையும் திறந்துவைப்பார்.

அமைச்சர் விஜயத்தின் போது இம்மண்டப வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக கொழும்பிலிருந்து கீரிமலைக்கு ஒரு விசேஷ நிபுணர் குழு வந்துள்ளது.

இக் குழுவின் உதவியுடன் இம்மண்டபம் அமைக்கும் வேலை மிகத் துரிதமாக நடைபெற்றுவருகிறது.

இம்மண்டபம் திறந்து வைப்பதற்கு முன் அமைச்சர் புராதன ஸ்தலமாக விளங்கும் கீரிமலை சிவன் கோவிலில் நடைபெறும் விசேஷ பூஷையில் கலந்து கொண்டபின்னர் ஊர்வலமாக நவீன நகர்த்திட்டத்துக்கு அழைத்துச் செல்லப் படுவார்.

## எம். எஸ். ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி. எம். எஸ். ஸின் இசைக் கச்சேரிகள் பல பொதுப்பணிகள், நிறைவேறுவதற்குப் பயன்பட்டன என்று குறிப்பிட்டார்,

திருமதி ருக்மணி தேவி. திருமதி சௌந்திரா கைலாசம். திருமதி மேரி கிளப்வாலா ஜாதவ், திருமதி வசுமதி ராமஸ்வாமி ஆகியோர் திருமதி எம். எஸ். ஸைப் பாராட்டிப் பேசினார்கள்.

திருமதி எம். எஸ். ஸின் ரசிகைகள் தயாரித்த பாராட்டுப் பத்திரத்தை திருமதி ருக்மணி ராஜகோபாலன், திருமதி எம். எஸ். ஸுக்கு அளித்தார்.

திருமதி விசாலாட்சி நாராயணஸ்வாமி அனைவரையும் வரவேற்றார். திருமதி மைத்ரேயி ராமதுரை நன்றி கூறினார். குமாரிசுகுணா, திருமதி மணி கிருஷ்ணசாமி ஆகியவர்களின் இசைக்கச்சேரி நடந்தது.

வரிஅதிகரிப்புக்கு

## மீனவர் ஆட்சேபம்

பூநகரி, வெள்ளி

பூநகரி கிராமசபை இவ்வருடம் வரியை அதிகரித்திருப்பதால் கடந்த சில தினங்களாக இதை ஆட்சேபித்து மீனவர்கள் ஒருவரும் வியாபாரத்துக்கு சந்தைக்குவராததால் வாடிக்கைகாரர்களும்மீன்வாங்குவோரும்பெரும் கஷ்டத்துக்குள்ளாகியதோடு கடற்கரை நோக்கிச் செல்லுகின்றனர். பழைய நிலைக்கு வரியைக் கொண்டு வருமாறு தலைவரை மீனவர்கள் கோரியுள்ளனர்.

## பிரதான வீதிகளுக்கு பெயர் சூட்டப்படும்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராமசபைப் பிரிவிலுள்ள சகல பிரதான வீதிகளுக்கும் பெயர் சூட்ட சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். கிராமத்தில்வாழ்ந்து மறைந்த பெரியார்களின் பேர்களையும் மற்றும் பொதுவான பெயர்களையும் சூட்டவிருப்பதாக தெரிய வருகின்றது.

## மீண்டும் வேலை

சுழிபுரம், வெள்ளி

தொல்புரத்தைச் சேர்ந்த திரு. ந. கிருஷ்ணசாமி இரண்டாட்டுக்குப் பின்னர் மீண்டும் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் சேவையில் இம்மாதம் முதல் சேர்க்கப் பட்டுள்ளார்.

அம்பாறை பொலிஸ்நிலையத்தில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராக கடமையாற்றும் இவர் இரண்டாண்டுக்கு முன்னர் சேவையிலிருந்து நீக்கப்பட்டார்.

வட்டுக்கோட்டை எம்.பி இவரது விஷயத்தை பிரதம மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன்மூலம் மீண்டும் பிரதமரின் அனுமதியுடன் வேலைக்குச் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. போ. ச. சேவைக்கு உபசபாநாயகர் பாராட்டு

உடுப்பிட்டி, வெள்ளி

"இலங்கைப் போக்குவரத்துச்சபை பொது மக்களின் நலனில் அதிக அக்கறை காட்டிவருகின்றது. அதிகரித்து வரும் பிரயாண நெருக்கடிகள் ஒரு தேசீயப் பிரச்னையாகிவிட்டது. இதனால் பொதுமக்கள் குறை கூறிவருவது வழக்கமாகி விட்டது. புதிய பஸ் சேவைகளை ஆரம்பிப்பதின் மூலம் பொதுமக்களின் நல்லெண்ணத்தை இ. போ. ச. இலகுவில் சம்பாதித்துக்கொள்ளலாம்.

புதிய பஸ்சேவைகளைப் பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், இதன் மூலமே மேலும் புதிய சேவைகளை ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்த முடியும்."

இவ்வாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் புதிதாக ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ள பஸ்சேவையொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

இப்புதிய பஸ்சேவை பருத்தித்துறை பஸ்நிலையத்திலிருந்து புறப்பட்டு யாக்கரு, கலிகைச்சந்தி, மண்டான் ஊடாக வல்லைசென்று அங்கிருந்து அச்சுவேலி,வசாவிளான் ஊடாக யாழ்ப்பாணம் சென்றடையும்.

---

யாழ். நகருக்கு

## கூட்டுறவு விசாரணைக் குழு

அளவெட்டி, வெள்ளி

கூட்டுறவு சீர்திருத்தங்கள் பற்றி ஆராய மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு அடுத்த மாதம் 11-ம், 13-ம், 15-ம் திகதிகளில் யாழ். நகரில் விசாரணை நடத்தும்.

இவ்விசாரணையின் போது வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை, யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜம் ஆகியன உட்பட மற்றும் பல சங்கங்களும் சாட்சியமளிக்கும்.

## மேல்நாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

### சமாதானஇளைஞர் குழு

66-ம் ஆண்டு பீகாரில் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்ச நிவாரண வேலைகள் செய்வதற்காக நானும் சென்றிருந்தேன். உலகத்தில் உள்ள பல நாடுகளிலிருந்து, தங்கள் சுகபோக வாழ்வை ஒதுக்கிவைத்துவிட்டு ஏராளமான இளைஞர்கள் அங்கு வந்தனர். கொதிக்கும்வெய்யிலைப் பொருட்படுத்தாமல், பசிக்கும் பட்டினிக்கும் இடையில் உழைத்ததை நான் அவதானித்த தன்விளைவுதான் இந்திய சமாதான இளைஞர் குழுவொன்றை உருவாக்கசெய்தது. பிறநாட்டு இளைஞர்களின் சேவை என்மனதை தோட்டுவிட்டது. குளிர் தேசங்களில் இருந்துவந்த இளைஞர்கள் எப்படிகொதிக்கும் வெயிலில் வேலைசெய்கிறார்களென எண்ணினேன். அவர்களின் சேவைமனப்பான்மையில் என் மனதை பறிகொடுத்து விட்டேன். அவர்கள் தொடர்ந்து 8 மணிநேரம் சேவை செய்தார்கள். இதேபோன்று தான் பணியாற்றும் நிறுவனம் ஒன்று எங்கள் மத்தியில் உருவாகவேண்டும் என்று கருதினேன்.

இந்தியசமாதானஇளைஞர் குழுவில் (உபபாரதிய தர்ம சாந்தி சேனை)நான்கு கொள்கைகளும், மூன்றுசெயல்திட் திட்டங்களும் இருந்தன. தேசிய ஒற்றுமைதான் முதலாவது கொள்கை. இலங்கையில்கூட பலதரப்பட்ட மக்கள் இதற்காக பாடுபட்டு வருகின்றனர், இலங்கையிலும் பார்க்க பல்வேறு பிரிவினர் வாழும் நம்நாட்டில் தேசிய ஒற்றுமை அவசியம் என்பதை உணர்ந்தோம். ஜனநர்யகம், ஒரே சமுக உணர்வு, உலக சமாதானம் ஆகியவை மற்ற கொள்கைகளாகும்.

### மூன்று செயல் திட்டம்

செயல் திட்டங்கள் மூன்ருக பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவது வாராந்த பயிற்சிநிலையம், இரண்டாவது நீண்ட விடுமுறை வேலைபயிற்சி நிலையம், மூன்ருவது படிப்பு முடிந்தபின்ஓராண்டு சேவை. மூன்ருவது திட்டத்தை [illegible] நாம் இன்னும் செயல்படுத்த ஆரம்பிக்கவில்லை. ஏனெனில் ஓராண்டு சேவைசெய்யும்போது அவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும். அதுபற்றித்தான் என்னசெய்யவேண்டுமென ஆலோசனை நடைபெற்றுவருகிறது. சுகாதார விவசாய அபிவிருத்தி அடிப்படையாகத்தான் இந்த இயக்கம் இயங்கவேண்டும்.

### உணவில் சுயதேவை

உணவிற்காகபிறநாட்டை எதிர்பார்த்துக்கொண்டிருந்தால், சுதந்திரம் பெற்ருேம் என்று கூறுவதில் அர்த்தமில்லை. உணவு கொண்டுவரும் கப்பல் தடைபட்டால் நமது நிலைமை என்ன! ஆதலால்தான் உணவில் சுயதேவையைப் பூர்த்திசெய்ய முயற்சிக்கவேண்டும். இயற்கை வளம் பொருந்தியஇலங்கையும் உணவிய்தன்னிறைவு அடைய முடியும். ஆடம்பர வாழ்வு, கார், பங்களா இன்றி வாழலாம். உணவின்றி ஒருநிமிடமும் வாழ முடியாது.

எனது சொந்தஇடமான பீகாரில் கூட்டுறவு இயக்கங்கள் வெற்றியடையவில்லை. ஆனுலும் வேறு சில பகுதிகளில் வெற்றியடைந்திருக்கிறது. பற்ருக்குறை ஏற்படுங் காலங்களில் பங்கீட்டு முறைக்கு மட்டும் கூட்டுறவு சங்கங்கள் என்ருல் அவற்ருல் பிரயோசனமில்லை, நாட்டில் உணவுப்பொருள்களில் பற்ருக்குறை இல்லாத காலத்தில் இச்சங்கங்களின் நிலை என்னவாகும்?

கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேலைநாட்டவர்களிடமிருந்து அறிவதற்கு ஒன்றுமில்லை. காந்திஜி, ரவிந்திரநாத்தாகூர் முதலானவர்களைப் பின்பற்றி அவர்களின் வழிகளில் அபிவிருத்தி செய்தால் கிராம முன்னேற்றத் திட்டங்களில் வெற்றி காணலாம்.

மேல்நாட்டு கல்வி முறையை அப்படியே பின்பற்றியதால் தான் எங்கள் நாடுகளில் படித்த வேலையற்ருேர் பிரச்னை உருவாகியிருக்கிறது.

## பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினத்திற்கு தீவுப்பகுதி மக்களால் கார் ஒன்று அன்பளிப்பதற்காக நேற்று ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இக்கூட்டம் பின் போடப்பட்டுள்ளது.

## முன்னுள்கவர்னர் காலமானுர்

புதுடில்லி, ஜன. 10

ராஜஸ்தான் முன்னுள் கவர்னர் டாக்டர் சம்பூரானந்து இன்றுகாலை வாராணசியில் காலமானுர். விடுதலைப் போரில் 5முறை சிறை சென்ற இவருக்கு வயது 80 ஆகும். சட்டசபை உறுப்பினராகவும், கல்வி மந்திரியாகவும் இவர் கடமையாற்றியிருக்கிருர்.

## ஏழைப் பிள்ளைகளுக்கு மாத்திரம்

சுன்னுகம், வெள்ளி

இதுவரைகாலமும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக புத்தகங்கள் வழங்கிய உடுவில் கிராமசபை இவ்வாண்டு ரூபா 1000 செலவில் ஏழை மாணவர்களுக்கு மாத்திரம் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கும் என கிராமசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## ஹரிசனருக்கு காணி

சுன்னுகம், வெள்ளி

காணியற்ற ஹரிஜனர்களுக்குஉடுவில் தொகுதியைச் சேர்ந்த மல்வம், சங்குவேலி ஆகிய இடங்களிலுள்ள 16 ஏக்கர் தனியார் காணியை காணி சுவீகரிப்புச் சட்டத்தின்கீழ் சுவீகரித்து வழங்க வலிவடக்கு காரியாதிகாரி திட்டமிட்டுள்ளார். இக்காணிகள் காணிக்கச்சேரிமூலம் பகிர்ந்தளிக்கப்படும்.

## யாழ்ப்பாணத்துக்கு பி. எம். ஜி. விஜயம்

யாழ்ப்பாணம், சனி

போஸ்மாஸ்டர் ஜெனரலாக பதவியேற்றபின் திரு. வேர்ணன் அபயசேகரா வடபகுதிக்கு முதல் தடவையாக உத்தியோக பூர்வமாக அடுத்த மாதம் 9-ம் தேதி வருகிருர். இவருக்கு அமோக வரவேற்பு அளிப்பதற்கு வடபகுதியில் உள்ள தபால் தந்தி ஊழியர்கள் ஒழுங்குசெய்து வருகின்றனர்.

## வாலிபர் செய்த முடிவு

சுன்னுகம், வெள்ளி

10 வருடங்களாக வேலையின்றியிருந்த 28 வயது நிரம்பிய வாலிபர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். குப்பிளானைச்சேர்ந்த எஸ். பாலசுப்பிரமணியம் என்பவரே நேற்றுமுன்தினம் தற்கொலை செய்துகொண்டவராவர்.

கடந்த சிலவருடங்களாக இவர் பெற்ருேருடன் மனஸ்தாபப்பட்டிருந்ததாகவும் பல தடவை நீதிமன்றங்களில் குற்றம் பெற்றவரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. குப்பிளான் சுடலையில் காணப்பட்ட இவரது பிரேதம் பரிசோதனை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி திரு. சுந்தரலிங்கம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. [illegible] விசாரணையின் போது இருந்தார்.

யாழ். மாநகரசபை

# அங்கத்தவர்கள் மாயமாக மறைகின்றனர ?

### மேயர்தேர்தல் ஏற்படுத்தும் பரபரப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மேயர் தெரிவு தினம் நெருங்க நெருங்க அங்கத்தவர்கள் ஒருவர் பின் ஒருவராக மறைந்துகொண்டிருப்பதாக நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

புதிய வட்டார உறுப்பினர் ஒருவர் கடந்த மூன்று தினங்களாக அவரது வட்டாரத்தில் காணப்படவில்லையென பேசப்படுகிறது. மற்ருெரு பழைய அங்கத்தவர் நேற்று முன்தினம் மாலை முதல் மறைந்துவிட்டாரம். இதனுல் அந்த உறுப்பினரின் குடும்பத்தார் செய்வதறியாது திகைத்தபடி இருக்கின்றனராம்.

நல்லூர் தொகுதியைச் சேர்ந்த யாழ். மாநகரசபையின் பழைய உறுப்பினர் ஒருவரின் நடமாட்டமும் குறைந்துள்ளதாம்.

மேயர் தெரிவிற்கு போட்டியிட முன்வந்திருக்கும் ஒரு மாஜி மேயர் இரவு பகலாக மறைந்த அங்கத்தவரை காரில் தேடித்திரிவதாகவும் தெரிய வருகிறது. மற்றும் தமக்கு ஆதரவு தெரிவிக்கும் அங்கத்தவர்களையும் எச்சரிக்கையாக இருக்கும் படியும் அவர் கூறியுள்ளாராம்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தியதாகவும் மேயர் தெரிவு நடைபெறும் வரை அவர் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருப்பார் என்றும் தெரியவருகிறது.

ஆரம்ப காட்களில் அக்கறை காட்டிவந்த ஒரு சில தமிழரசு எம். பி.க்கள் தற்பொழுது இதில் தலையிடாமல் ஒதுங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. தமிழரசு மாநகரசபை உறுப்பினர்கள் மேயர் தெரிவில் தங்கள் நிலைமை பற்றி இரகசியமாக வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

---

அல்லைப்பிட்டி, வெள்ளி

நாரந்தனை சென். பீட்டர்ஸ் பாடசாலையையும் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையையும் மகாவித்தியாலயங்களாகத் தரமுயர்த்தித் தரவேண்டுமெனக் கல்விப் பகுதியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை நாரந்தனைக் கிராமசபையினர் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

## ரூ. 25 அபராதம்

உருத்திரபுரம், வெள்ளி

சின்னத்தம்பி கந்தையா என்பவர் சட்டவிரோதமாக மூன்றுபோத்தல் சாராயம் கொண்டு போனதாக கிளிநொச்சி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி திரு. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் 25 ரூபா அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## தொல்புரம் வென்றது

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் மத்திய சன சமூக நிலையக் கோஷ்டிக்கும், வட்டு-மேற்கு சூரியோதய விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதை பந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தினர் 5-0 கோல்களால் வெற்றி பெற்றனர். தொல்புரம் 'பொக்கனை' விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றது. திரு. மு. சடாட்சரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், சனி

கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: சி. பாலசிங்கம், உபதலைவர்: ஆ. ஐயாத்துரை, காரியதரிசி: வே. பழனி, உபகாரியதரிசி: வே. நடராசா, தனுதிகாரி: இ. தவராசா, 8 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மறக்க முடியவில்லை

நல்லூர், தெள்ளி

கடந்த டிசம்பர் மாதம் எட்டுத் திருட்டுக் குற்றங்களுக்காக சிறைசென்று திரும்பிய எஸ். முத்துறுள என்பவர் சில விஞடிகளுக்குள் மற்றுமொரு திருட்டில் சம்பந்தப்பட்டதாக பொலிசாரிடம் சிக்கிக் கொண்டார்.

இவர் இரண்டு டயர்களை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள சங்கக் கடையிலிருந்து திருடிக் கொண்டு வருகையில் சாதாரண உடையில்நின்ற யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றப் பிரிவைச் சேர்ந்த என். இ. இரத்தினம், எச். பெரேரா ஆகிய இருவரும் இவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவரைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட் நேற்று 2 வருட கடுங்காவல் தண்டனை விதித்து இரண்டுவருடம் பொலிஸ் கண்காணிப்பில் இருக்கும் படியும் 50 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

## 7600பேர் கொல்லப்பட்டனர்

வாஷிங்டன், ஜனவரி 10

பாரிஸில் வியட்னும் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமான காலத்திலிருந்து இதுவரையில் வியட்னுமில் 7600 துருப்புகள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விதிசெய்த சதி

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரத்தைச் சேர்ந்த த. சின்னத்துரை சுழிபுரத்திலுள்ள தனது தம்பியின் குடும்பத்தினரின் அவசிய தேவைக்கு உதவுவதற்காக 6000 ரூபாயுடன் யாழ்ப்பாணம்வருவதற்காககொழும்பு புகையிரதநிலையத்தில் வந்து டிக்கட் எடுத்தார். புகை வண்டியில் ஏறுவதற்குள் திடீரென ஏற்பட்ட இரத்தக் கொதிப்பினுல் அவர் மூர்ச்சித்து வீழ்ந்து மரணமானுர்.

கொழும்பில் நடைபெற்ற மரண விசாரணையின் போது இரத்தக் கொதிப்பினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. கொழும்பில் இருந்து இவரது சடலம் சுழிபுரம் கொண்டுவரப்பட்டது.

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org